Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 151

National Tamil Daily தேசிய தினசரி

(12-7-65)

விசுவாவசு ஆனி 28 ரபி அவ் லிறை 12 திங்கட்கிழமை



ஆதரவாளர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்
எமது
மீலாத் வாழ்த்துக்கள்

கே. என். எம்.
மீருன் சாஹிப்
கன்னாதிட்டி, - யாழ்ப்பாணம்.
போன் : 585


## ஏமாறாதீர்!

### பழங்களைப் பார்த்து வாங்குங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

ஏமாற்றிப் பிழைப்பது, திருடுவது போன்ற சம்பவங்கள் நமது நாட்டில் நிகழுவது சகஜம். இப்படியானவை பகலில் நடைபெறுவது இப்பொழுது சாதாரணம். ஆனால் கண்ணுக்கு முன்னால், நேருக்கு நேராக வாதாடி, விலையைக் கூட்டி, பொருளை ஏமாற்றி விற்பதென்றால் ...... ஓரளவு ஆச்சரியப்படவேண்டிய விஷயம்தான். இப்படியான சம்பவங்கள் யாழ்ப்பாணப் பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்பாக நடைபெறுகின்றன.

ஏமாற்றுபவர்கள்: சில நடைபாதை வியாபாரிகள். ஏமாறுபவர்கள்: நோயாளர்கள்: பொருள்: பழங்கள்!

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக குவியல், குவியல்களாக "தோடம்பழங்கள்" விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் பழங்கள் பெயரளவில் தோடம்பழங்களே தவிர உண்மையில் அவை அந்த ரகத்தைச் சேர்ந்தவைகளல்ல! குறிப்பாக நோயாளர்களும், மற்றவர்களும் தோடம்பழம் என்று ஏமாந்து இப்பழங்களை வாங்குகிறார்கள். ஆனால் உண்மையில் இவை தோடம்பழங்களல்ல. கிறேப் பழங்களாகும். (கிறேப்புறூட்) இந்தப் பழங்களுக்கும் தோடம்பழங்களுக்கும் அதிக வித்தியாசமுண்டு. தோடம்பழத்தின் ரகத்துக்கோ அல்லது அதன் சத்துக்கோ இப்பழங்கள் சிறிதும் லாயக்கற்றவை! உண்மையான தோடம்பழத்தின் விலையிலும் பார்க்க கூடுதலாக (50 சதம்—ஒரு ரூபா) விற்பனை செய்யப்படும் கிறேப் பழங்கள் பார்வையில் தோடம்பழமாகவே தெரிகின்றன. இதைப் பார்த்து வாங்குவதில் மக்கள்தான் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!

# நாசவேலை:

## மந்திரி சபை ஆராயும்

## விபரமான அறிக்கையை நிரந்தரக்காரியதரிசி சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஞாயிறு

**அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்றுவரும் நாசவேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது எப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராயும்பொருட்டு மந்திரிசபையின் விசேஷ கூட்டமொன்று இந்த வாரத்தில் நடைபெறவிருக்கிறது. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்கா மந்திரிசபைக்கு சமர்ப்பிக்கும் அறிக்கையைத் தொடர்ந்தே புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.**

**பரவலாக விசாரணைகள்**

அரசாங்கத்துக்கு எதிராக நடைபெற்றுவரும் நாசவேலைகள் குறித்து, சி. ஐ. டி பொலிஸாரும் மற்றும் பொலிசாரும் நாட்டின் பல பகுதிகளிலும் விசாரணை செய்து வருகின்றனர். கொழும்பிலுள்ள சி. ஐ. டி. தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த சில உயர் அதிகாரிகளும் பல பகுதிகளுக்கும் சென்று "நாசவேலைகள்" சம்பந்தமாக விபரம் திரட்டிவருவதாகக் கூறப்படுகிறது.

**விபரமான அறிக்கைகள்**

சி ஐ டி பொலிஸார் பாதுகாப்பு வெளிவிவகார நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி வி பி. சமரசிங்காவிடம் தொடர்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்து வருகின்றனர். இந்த அறிக்கைகளை திரு. சமரசிங்கா விவரமாக பரிசீலனை செய்து வருகின்றார். "நாசவேலைகள்" சம்பந்தமான முழு அறிக்கைகளும் அவருக்குக் கிடைத்ததும் விளக்கமான அறிக்கையொன்றை மந்திரிசபையிடம் திரு சமரசிங்கா சமர்ப்பிப்பார். இந்த அறிக்கையை மந்திரிசபையினர் விரிவாக ஆராய்ந்த பின்னரே மேற்கொண்டு எப்படியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதைக் குறித்து முடிவு செய்யப்படும்.

(5-ம் பக்கம் பார்க்க)

## திருப்பணிவேலையை மந்திரி பார்வையிடுவார்

நல்லூர், திங்கள்

ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து தொழிற்சாலையைப் பார்வையிட்டார். தொழிற்சாலை உரிமையாளர் திரு. அ சம்பந்தர் அமைச்சரையும் மற்றும் பிரமுகர்களையும் மலர் மாலை சூட்டி வரவேற்றார்.

அமைச்சர் திருச்செல்வம் இவ்வாரம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவிலில் நடைபெறும் கருங்கல் திருப்பணி வேலைகளைப் பார்வையிடும் பொருட்டு மாவிட்டபுரம் வரவிருக்கிறார்.

## சர்வகட்சி மாநாட்டின் மூலம் அதிக உரிமைகள் பெறலாம்

### காங்கிரஸ் வரவேற்பு கூட்டத்தில் ஜி. ஜி.

கோண்டாவில், ஞாயிறு

அரசாங்கத்துடன் ஒத்துழைத்துப் பெறும் உரிமைகளிலும் பார்க்க வட்டமேசை மகாநாட்டில் அதிக உரிமைகளைப் பெறலாம். வட்டமேசை மகாநாட்டில் பெறும் உரிமைகள் திட்டவட்டமானதாகவும் நிரந்தரமானதாகவும், எதிர்கால சந்ததியினருக்குப் பயனளிக்கக்கூடியதாகவும் இருக்கும்"

கோண்டாவில் கிழக்கு அரசடி பிள்ளையார் கோவில் முன்றலில் நேற்றிரவு நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் எம்.பி.யுமான திரு ஜி ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் காங்கிரஸ் எம் பி க்களாகும் கடந்த தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அபேட்சகர்களுக்கும் நல்லூர் தொகுதிப் பொதுமக்கள் சார்பில் நேற்றிரவு பகிரங்க வரவேற்பளிக்கப்பட்டது.

வண்ணார்பண்ணை நாவலர் மண்டபத்திலிருந்து நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் இரவு 11 மணிக்கு கூட்டமைதானத்தை வந்தடைந்தது அலங்கரிக்கப்பட்ட "ஜீப்" காரில் திருவாளர்கள் ஜி ஜி பொன்னம்பலம், எம். சிவசிதம்பரம், சி. சிவசிதம்பரம், எஸ ஸ்ரீ பாஸ்கரன், என். சிவகேசன், சி அருள்ம்பலம் ஆகியோர் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர். சுமார் 5 மைல் தூரம் வீதியின் இருமருங்கிலும் தோரணங்களாலும் கட்சிக் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது வீடுகள் தோறும் பூரணகும்பங்கள் வைத்துத் தலைவர்கள் வரவேற்கப்பட்டனர்

ஊர்வலம் நடைபெற்ற பொழுது நான்கு தமிழ்க்காங்கிரஸ் கிளைகளை திரு ஜி ஜி.

(5-ம் பக்கம் பார்க்க)

## புதிய கல்வித் திட்டம் அதிக நன்மைபயக்கும்

### நகுலேஸ்வரா கட்டிடத் திறப்பு விழாவில் எஸ். ஜே. வி.

கல்லூர், திங்கள்

"தமிழ் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டிய பெரும் பொறுப்பு தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதிகள் கையில் உள்ளது. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கல்வித்திட்டத்தில் கமத்தொழில், குடிசைக்கைத்தொழில் என்பனவற்றிற்கு முக்கிய இடமளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அமுலாக்கப்படும்போது மக்கள் இதன் நன்மையை உணர்வர்" என்றும் காங்கேசன்துறை எம் பி, திரு எஸ் ஜே வி செல்வநாயகம் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்து பேசுகையில் கூறிப்பிட்டார்.

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தின் பத்தாவதாண்டு விழாவும் புதிய கட்டடத் திறப்புவிழாவும் வட்டப்பகுதி உதவி வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்றன. திரு தணிகாசலம் வித்தியாலயக் கொடியை ஏற்றி வைக்க திரு செல்வநாயகம் பாடசாலையின் புதிய கட்டடத்தைகுத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார்.

வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு வ கந்தையா வித்தியாலய அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில், குறுகிய கால எல்லைக்குள் வித்தியாலயம் வட்டப்பகுதியில் முன்னணி இடம் பெற்றிருப்பதற்குப்பெற்றோர்களும் ஆசிரியர்களும் காட்டும் ஒத்துழைப்பே முக்கியகாரணமாகுமெனக் குறிப்பிட்டார்,

உதவி வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன்பின் பெற்றோர்கள் மத்தியில் அலட்சிய மனோபாவம் தலைதூக்கியுள்ளது. பாடசாலையின் எந்தத் தேவைகளையும் அரசாங்

(5 பக்கம் பார்க்க)

## கிருஷ்ணமேனன் கருத்து

புதுடில்லி, ஜூலை 11

"சீனா அணுகுண்டு வெடித்திருப்பதால் இந்தியாவும் அணுக்குண்டு தயாரிக்கவேண்டுமென்ற அவசியமில்லை இந்தியா அணுகுண்டு தயாரிக்கத் தேவையில்லை. அணுசக்தி வறுமையைப் போக்க உடனடியாக பயன்படுத்தப்படுவதே இந்தியாவுக்கு மிக உகந்த வழி. என திரு. வி. கே. கிருஷ்ணமேனன் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## கெய்ரோவில் ஏமன் அதிபர்

கெய்ரோ, ஜூலை 11

ஏமன் ஜனாதிபதி ஸலால் ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார்.

## கிராம சேவையாளர் வருடாந்த மகாநாடு

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணமாவட்டகிராமசேவையாளர் வருடாந்தமகாநாடு இம் மாதம் 15-ந் திகதி யாழ்ப்பாணம் வை.எம்.சி. ஏ மண்டபத்தில்நடைபெறவிருக்கிறது

## இராணுவ மேலதிகாரியை தாக்கிய வழக்கு

### மூவர் விடுதலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இராணுவ மேலதிகாரியை தாக்கியதாக மன்னார் முகாமைச் சேர்ந்த பத்து ராணுவ வீரர்கள் மீது குற்றஞ்சாட்டி மன்னார் இராணுவ நீதிமன்றத்தில் மேஜர் பீ ஜீ. பண்டிதர், கப்டன் எஸ், டபிள்யு. ஜெயசேகரா, லெப்டினன்ட் எ விஜயகுணவர்த்தன முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் மூன்று எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி, தலைமன்னாருக்கும் பேசாலைக்குமிடையில் இலங்கை சிங்க ரெஜிமன் பிரிவைச்சேர்ந்த இராணுவத்தினர்களான ஈ. ஜீ. எம். வீரவர்த்தன ஜீ.ஏச்.என்.பெர்னாண்டோ யூ.டி. குணரத்ன, டபிள்யூ. எஸ், ஜெயவர்தன, சிஎன்.பி. சமரகோன், எல்.பி. பியசேன, எல். பிரேமதாசா,

(5-ம் பக்கம் பார்க்க)


மீலாத் வாழ்த்து



முஸ்லிம் வாசகநேயர்களுக்கு மீலாத் தினத்தை முன்னிட்டு
எமது
வாழ்த்துக்கள்.

# நேர்வழி காட்டிய நாயகம்

— ஏ. எம். ஏ. அஸீஸ் —

நாங்கள் எமது பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்ததினத்தை விசேஷமாகக் கொண்டாடுகிறோம்; இப்புனித றபீ-உல் அவ்வல் மாதத்தில் பிரசங்கங்கள் மூலமாகவும் வேறு பிரசாரங்கள் மூலமாகவும் நாயகத்தின் வாழ்க்கையில் பொதிந்துள்ள இலட்சியங்களைச் சரிவர அறியத்தெண்டிக்கிறோம்.

அவைகள் எங்கள் வாழ்க்கையிலும் பிரதிபலிக்குமாறு ஆண்டவனை இரந்தவர்களாயிருக்கின்றோம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புரட்சிகரமான போதனைகளையும் சாதனைகளையும், தங்களுடைய "ஜாவித்நாமா" என்னும் சிறந்த கிரந்தத்தில், நாயகமே (ஸல்) அவர்களின் பரம விரோதி அபூஜஹில் பேசுமாப் போல் ஓ புதுமையற்றமுறையில் வர்ணித்திருக்கிறார்கள் கவியரசர் அல்லாமா இக்பால் இவர்கள். அபூஜஹில்; நாயகத்தால் அடிமைகளுக்கும் ஏழைகளுக்கு வந்த மோசத்தைச் சுட்டிக் காட்டி பின்வருமாறு கடிந்துரைக்கின்றான்:-

"ஆம், முஹம்மது என்ன செய்தார் பார்த்தீர்களா! என் தோழர்களே! உலகத்தாரே! எங்கள் இதயங்களை எல்லாம் அவர் தம் செயல்களால் புண்படுத்திவிட்டார். புத்துஹான்கள் கிரம்பியிருந்த கஃபாவை அழித்துவிட்டார். சர்வாதிகாரம், சாம்ராஜ்யம் ஆகியவைகளுக்கு முற்றுப் புள்ளி போட்டுவிட்டார். எங்கள் இளைஞர்களைத் தம் வலையில் கெட்டித்தனமாய்ச் சிக்க வைத்துவிட்டார். எங்கள் பரம்பரைத் தெய்வங்களாகிய லாத்தையும் மனாத்தையும் துண்டு துண்டாக்கினார். உலகமே! நீ இதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயா? முஹம்மது எப்படியானவர் தெரியுமா?

அழிவுள்ள பொருட்களை அடியோடு வெறுத்து அழிவில்லாப் பரம்பொருளை அவனுடைய பொருத்தத்தையும் தேடியவர். இப்பொழுது காணப்படும் காட்சிகள் நமக்கு அழியக்கூடியவை, என்ற உண்மையை நிரூபித்தவர், தாம் கொண்டு வந்து சாதித்த சன்மார்க்க நெறியால் தேசத்திமிர், சாதித்திமிர் ஆகியவைகளையும் அவைகளைப் போன்றவைகளையும் அடியோடழித்தவர்.

குறைஷிக்குடும்பம், அறபுச் சாதி ஆகியவைகள் ஏனைய குடும்பங்கள், சாதிகளைப் பார்க்கிலும் மேலல்ல என்பதை வற்புறுத்தியவர். மேம்பட்டவன் எனக் கருதப்படுவோனும், கீழ்ப்பட்டவனெனக் கருதப்படுவோனும் சரிசமம் என்பதை வற்புறுத்தியவர், அடிமையோடு ஒன்றுசேர்ந்து உணவருந்தியவர், இப்படியானவர்தான் முஹம்மது"

இவ்விதமாக உணர்ச்சி ததும்பும் முறையில் எங்கள் மார்க்கத்தின் விசேஷப் பண்பாடுகளாகிய ஏகதெய்வக் கொள்கையையும், சமத்துவ சகோதரத்துவத்தையும் கவியரசர் அல்லாமா இகபால் விளக்கியிருக்கிறார்கள். நமது ஏக தெய்வக் கொள்கை ஒருமைத்தன்மை பொருந்தியது. ஆண்டவனுக்கு அடிபணிதல் என்பதே இஸ்லாம் என்ற பதத்திற்குரிய பொருளாகும். வணக்கத்துக்குப் பாத்திரமான நாயன் யாருமில்லை, அல்லாஹ்வைத் தவிர எல்லாப் புகழும் அவனுக்கே உரியன. அவன் இணை துணை அற்ற ஏகன், அவனன்றி ஓர் அணுவும் அசையாது ஆக்கவும் அழிக்கவும் வல்லவன் அவனே. நிகரற்ற அன்புடையோனும், அளவற்ற அருளாளனும் அவனேயாகும் இத்தன்மைகளையே இஸ்லாம் எப்பொழுதும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் சகோதரத்துவத்தைப் பற்றி பல இடங்களில் எங்கள் நாயகம் (ஸல்) அழுத்தமாகக் கூறியுள்ளார்கள். விசேஷமாக அவர்களின் இறுதி ஹஜ் யாத்திரையின்போது அவர்கள் திருவாய்மலர்ந்தருளியவை இங்கு குறிப்பிடத்தக்கவை அவர்கள் அந்த வேளையில் பின்வருமாறு கூறினார்கள்:-

"எனது மக்களே! கேளுங்கள். ஒவ்வொரு முஸ்லிமும் மற்ற முஸ்லிமின் சகோதரன், முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள், என்பதை மனதில் திட்டமாகப் பதியவைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லோரும் சமமானவர்கள், சம உரிமையுடையவர்கள், ஒரே விதமான கடமை செலுத்த வேண்டியவர்கள், ஏகசகோதரத்துவத்தால் பிணைக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் அங்கத்தவர்கள், நீங்கள் உங்கள் சகோதரரிடமிருந்து அவர் உங்களுக்கு கொடுக்காத ஒரு பொருளை எடுப்பது கூடாது. இப்புனிதமான குர் ஆனை உங்களுக்கு நான் விட்டுப்போகின்றேன், இதைத் தவறாமல் கைப்பற்றி நடவுங்கள். இன்றேல் நீங்கள் வழி தப்பிப் போய்விடுவீர்கள்."

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே பரிபூரண மனிதர். மானிடர்க்கு வழிகாட்டி மானிலத்தனக்கோர் மணிவிளக்கு, மறுவிலாதெழுந்த முழுமதி மனித வர்க்கத்துக்கு ஒரு சமூக அல்லது முன்மாதிரி. ஆகவே நாங்கள் மற்ற எல்லோரையும் பார்க்கிலும் நாயகம் (ஸல்) அவர்களையே நேசிக்கவேண்டும். நேசித்து அவர்களின் கிருபையை நாடவேண்டும் நாடி ஆண்டவனின் அருளைப்பெறவேண்டும்.

ஓர் உண்மை முஸ்லிம் எப்படியவனாயிருக்க வேண்டும் என்பதை அவர்கள் எங்களுக்குக் காட்டிப்போயிருக்கிறார்கள். உண்மை முஸ்லிம் ஆண்டவனைப் புகழ்பவனும் அவனுடைய கட்டளைக்கு அடிபணிபவனுமாய் இருப்பான். அவனது நாவினாலும் கையினாலும் உலகத்தாருக்கு நன்மையே ஒழிய வேறொன்றும் விளையாது.

நபிகள் பெருமானார் அவர்களின் வாழ்க்கை கற்பனைக் கட்டுக்கதைகளால் பீடிக்கப்படாமல் சரித்திரபூர்வமான விசேஷத் தன்மை பெற்றது. எங்கள் நபிகள் நாயகமவர்கள் சமாதான கர்த்தராயிருக்கிறார்கள்...

# அண்ணல் அவதரித்தார்

— எம். முஹம்மது றஸீத் —

எம்பெருமான் (ஸல்) அவர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர். முன்னைய கால மக்கள் அறிவு, ஆற்றல், தத்துவம் குன்றியவர்களாகக் காணப்பட்டார்கள். மக்கள் மாக்களாக வாழ்ந்தார்கள். கல்வி, அறிவு வாசனையற்றவர்களாக இருந்தார்கள். இம்மக்களைச் சீர்திருத்த இறைவனால் மனித குலத்துக்கு அனுப்பப்பட்டு முன்மாதிரியாக விளங்கினார்கள், நபிநாயகம் இறைவனுடைய சக்தியில்தானாகவே இயங்கக் கூடியதுன்னிய அறிவு காணப்பட்டது.

எம்பெருமானார் றசூலே கரீம் (ஸல்) தமது வாழ்வின் கூடிய நேரத்தைச் சத்திய சன்மார்க்கத்துக்கே அர்ப்பணம் செய்தார்கள், காபிர்களின் கொடுமையைப்பொருட்படுத்தாது இஸ்லாமிய பிரச்சாரத்தைத் தீவிரமாக நிலைநாட்டினார்கள். இப்படியான பிரச்சாரத்தை அரேபியா முழுதும் பரப்பினார்கள். காலடைவில் மக்கள் இஸ்லாத்தை விரும்பினார்கள். இதே நேரத்தில் காபிர்களின் கொடுமைகளும் அதிகரித்தன. இதன் காரணமாக அண்ணல் அவர்கள் தற்பாதுகாப்புக்காகப் போர் புரியவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க ஆரம்பத்தில் இரகசியமாகவும் பின்னர் பகிரங்கமாகவும் இம்மை மறுமை இரண்டிலும் நற்பயனளிக்கும் இயற்கை மார்க்கமாகிய இஸ்லாத்தைப் போதித்தார்கள், சத்திய சன்மார்க்கத்தின்பால் அழைக்கும் சமயம் திரு நபி (ஸல்) அவர்கள் அனுபவித்த கஷ்டங்களும் கவலைகளும் அளப்பரிடன. கடைசியாக உலக ரட்சகரின் உயிரைப் பிடுங்கி எடுக்க முடிவும் செய்தனர். இத்தனைக்கும் நபியவர்கள் கைக்கொண்ட பொறுமைபெனும் ஆயுதம் மிக உதவியா இருந்தது. சன்மார்க்க அழைப்பைக் கைவிடாது செய்தார், நன்நம்பிக்கையில் சிறிதும் களங்கம் ஏற்படவில்லை. கடைசியாக வெற்றியும் பெற்றனர், இஸ்லாமிய வரலாற்றிலே மறுமலர்ச்சியான சமுதாய புரட்சியை ஏற்படுத்தினார்கள், அரேபியா முழுவதும் இஸ்லாம் பரவலாயிற்று. இஸ்லாம் ஒரு வாழ்க்கைத் திட்டம், ஒவ்வொரு தனி மனிதனும் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அன்பு மார்க்கம். எம்பெருமான் (ஸல்) அவர்கள் மாநிலத்துக்கோர் மணிவிளக்காய் சுடர்விட்டு ஒளிரும் விளக்கைப்போன்று அரபு நாடு முழுவதும் அவருடைய போதனைகள் பிரகாசிக்கத் தொடங்கின. ஆயிரம் கடவுளர் உண்டு என்று நம்பி கல்லையும் மூர்த்தியையும் கண்டதும் வணங்கிய மக்களை உருவமற்ற ஒரேயொருவனை இணைதுணையற்ற இறைவனை பிறபிறப்பற்ற பெரியோனை வழிபடும் படியாகச் செய்த அண்ணல் அவர்கள் நல்லறமோ அன்புலமோ அற்று கொடுமை செய்வதை வாழ்வின் சீர்நிறை நெறியாகக் கொண்டு வாழ்ந்தோரை இறைகாட்டிய மறைநெறியின் செலுத்திய செம்மல் நபி (ஸல்) அவர்கள் இதயத்தில் இருள் கொண்டு குடிப்பதையும் சூதையும் கும்மாளம் அடிப்பதையும் உயர் அறம் என்று இறுமாந்திருந்த உன்மத்தரை இறைவழியில் உயிர் அளிக்கும் தியாகச் செம்மல்களாய் பெரியோனை நினைந்துருகும் பெருந்தகையாளமக்களாய்ஆதரவற்ற அநாதைகளுடன் நாதியற்ற எளியவர்களுடன் துன்பம் துயரத்தில் கிடந்து புழுவாகத் துடிக்கும் மக்களிடம் அன்பு செலுத்தி கை கொடுத்துக் காக்கும் வாழ்வளித்து உயர்த்தும் மேல் மனிதர்களாய் ஆக்கிய எம்பெருமானார் அரபு நாட்டு மக்களுக்கு அரசியல் அறிவித்து புதுமை புரிந்து நபிகள் நாயகம் செய்த தவத்துக்காகத் தலைமுறை தலைமுறையாக பலிக்குப் பலியாக அணையா குரல் எழுப்பி ஒருவரோடு ஒருவர் போராடிக் குருதி சிந்தி வாழ்ந்தவர்களைத் தவற்றை மன்னிக்கும் தகைமையாளர்களாய் சோதனை காக்கும் செம்மை நிறைகோலராய் பிறர்க்குதவும் வண்மை பெற்றோராய் மாற்றினர் அநாசாரத்தில் மூழ்கி இருளில் தடுமாறி விலங்குகளைப்போல் வசித்துவந்த மக்களை மனிதர்களாய், புனிதர்களாய், வெற்றியாளர்களாய், வேந்தர்களாய், அறிவு விளக்கு ஏற்றுவராய் நாகரிக சுடர் சொரிவோராய் கல்வியிலும், அறிவிலும் கரைகண்டவராய் ஆக்கிய நபிகள் நாயகம் (ஸல்) வரலாறு ஏட்டில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்போது பெற்றோர் என்று கருதப்படும் மக்கள் தலைவர்கள் எல்லாம் தலைகுனியும் வண்ணம் அரசோச்சிய அபூபக்கரையும், உமரையும் நபிகள் நாயகம் உற்பத்திசெய்தார். ஐம்பது ஆண்டுகளில் உலகமே கண்டு உட்பட்டிருக்க அப்பாற்பட்டிருக்க அரபு நாட்டில் சாலிமேனும் ஹனிபாலும் வெட்கித் தலைகுனியும் வண்ணம் வீரப்போர் நடத்திய ஹாலிதை அரபு மண்ணில் உதிக்கச்செய்த நபிகள் நாயகம் கண்களை மூடிக்கொண்டார்கள், அவர் கண்களை மூடிக்கொண்டாலும் அவர்கள் ஏந்திய கந்தா விளக்கு அணையாது எரிந்துகொண்டிருக்கிறது.

(ஸல்லல்லாஹு அலா முஹம்மதி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்!)

கார்கள், ஆனால் சமயம் நேர்ந்தபொழுது சண்டை முனையிலும் வழி காட்டக்கூடியவர்களாயிருந்தார்கள். மன்னர் பதவி வகித்தபோதிலும் எளிய வாழ்வை மேற்கொண்டார்கள்; அனாதையாயிருந்தார்கள்; அண்ணலாய்த் திகழ்ந்தார்கள் எந்தெந்தத் துறைகளிலெல்லாம் எங்களுக்கு முன்மாதிரி வேண்டுமோ அந்தத் துறைகளிலெல்லாம் நாயகமவர்கள் எமக்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள் அவர்கள் எந்த வாழ்க்கையைத் தம்முடைய வாழ்வின்போது அனுஷ்டித்தார்களோ அந்த வாழ்க்கைதான் இஸ்லாமிய வாழ்க்கை. அவ்வாழ்க்கை எங்கள் இலட்சியங்களைக் காப்பாற்றும், மிருக உணர்ச்சியை சிதைத்து எம் நிலையை உயர்த்தும். இங்கும், அங்கும் ஆனந்தத்தைத் தரும். இவ்விதமான வாழ்க்கையை நாம் நேரான வழியில் சீராக நடத்த எல்லாம் வல்ல நாயகன் துணை புரிவானாக. — ஆமீன்

## பிறந்ததின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்ததினம்; இன்று யாழ்ப்பாணத்திலும் மற்றும் இலங்கையின் பல பாகங்களிலும் கொண்டாடப்படுகின்றது யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை ஐந்துசந்தியில் அமைக்கப்பட்ட கவர்ச்சிகரமான பந்தலின்கீழ் இன்று பல விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(8-ம் பக்கம் பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
மீலாத் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
றஸீன் பிறதர்ஸ்
194, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 299

றேடியோ, மின்சார
உபகரணங்களுக்கு
ஏ. கே. முகம்மது அன் கோ
மின்சார ஒப்பந்தகாரர்கள்
150, காங்கேசன் துறை றோட், யாழ்ப்பாணம்
போன்: 411

ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது இதயங்கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்
றிபைன் அன் கோ,
பிடவை வியாபாரிகள்
(வட இலங்கையில் மிகவும் புகழ்வாய்ந்த
தையல் ஸ்தாபனம்.)
40, பெரியகடை, — யாழ்ப்பாணம்.

உங்கள் அனைவருக்கும்
எங்கள்
மீலாத் விழா
வாழ்த்துக்கள்
தங்க மாளிகை
யாழ்ப்பாணம்.
போன்: 281

'இறைவனைத் தியானித்தால் நோய்தீரும்; மனிதர்களைத் தியானித்தால் நோய்வரும்'

# அகிலம் போற்றும் அண்ணல் நபி

— இப்ருஹீம் நைபீர் —

[(நபியே) நாம் உம்மை (இவ்வுலகிலுள்ள) சகல மனிதருக்குமே நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கின்றோம். எனினும் மனிதரில் பெரும்பாலோர் (இதனை) அறிந்துகொள்ள வில்லை. (அல்குர்ஆன்: 22-34-18)]

அகில உலகத்திற்கும் அருட்கொடையாகவும் அருள் பிளம்பாகவும் அண்ணல் நபி (ஸல்) அனுப்பப்பட்டவர்கள் என்பதில் ஐயமில்லை. "உம்மை அருட்கொடையாகவே அல்லாமல் நாம் அனுப்பவில்லை" என்று இறைவன் தனது அரும் மறையாம் திருமறையில் கூறுகின்றான். உத்தம நபி (ஸல்) உலகமனைத்திற்கும் உற்ற உதவியாளராக இருந்தார்கள். அன்பும் அருளும் அண்ணலவர்களிடம் உசாரதுணமாக இலங்கின. ஆண்டவனது அன்பும் அருளும் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமானால் இறைவனின் சிருஷ்டிகளிடம் நீங்கள் அன்புடன் இரக்கம் காட்டுங்கள்" என்று உபதேசித்தார்கள்.

இறைவனையும் இறுதி நாளையும் உறுதியாக நம்புகிறவர்களுக்கு நிச்சயமாக இறைவனின் தூதரிடத்து அழகிய முன்மாதிரியமைந்துள்ளது. இவ்வாறு இறைவன் தன் திருமறையில் பெருமானாரின் சிறப்பியல் புகழைச் சுட்டிக் காட்டுகிறான்.

அண்ணல் நபி (ஸல்) அவதரித்த இப்புனித நாளில் அன்னாரின் ஞானநிறையங்களையும் அவர் விட்டுச் சென்ற பணிகளையும் நினைவு கூர்வது எமது கடனாகும்.

உலக ரட்சகர் முஹம்மது முஸ்தபா றசூலே கரீம் (ஸல்) ஹிஜ்ராவுக்கு முன் நபியுல் அவ்வலுக்கு சமகாலமாகிய கி. பி. 571-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ந் திகதி திங்கட்கிழமை இவர்கள் பிறப்பு நிகழ்ந்தது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஆரம்ப வாழ்வு பொலிவுற்றிருக்கவில்லை. எனினும் தற்பெருமையில்லா ஆடம்பரமில்லா அவர் குணத்தையும் மிக நம்பிக்கைக்குரிய அவர் நடத்தைகளையும் கண்டும் கேட்டும் நன்கு புரிந்துகொண்ட மக்கா வாசிகள் பொதுஜன ஆதரவோடு அன்னாருக்கு கௌரவப் பட்டம் வழங்கினர் அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) எனறு. ஆகவே ஓர் உயர்ந்த அந்தஸ்து பெற்று விளங்கிய பெரிய சீமாட்டியான கதீஜா நாயகியின் வியாபார விவகாரங்களை வழி நடத்திச் செல்லும் பாரிய பொறுப்பு அவர்கள் மீது சுமத்தப்பட்டதில் ஆச்சரியமுண்டோ? 25-வது வயதில் 40 வயதான கதீஜாவை தமது பிராட்டியாராக ஏற்றுக்கொண்டதுவும் ஆச்சரியமல்ல.

அண்ணல் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இறையாட்சியை இம்மண்ணுலகில் நிலைநாட்டும் உத்தம இலட்சியத்துக்காகப் பாடுபட்டு பிரசாரத்தில் ஈடுபட்டு சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உட்பட்டு இருந்த காலை அன்னாரை எதிர்த்து நின்றவர்கள் பலர். கொடுமைப் படுத்தி சிந்தித்தவர்கள் பலர். இத்தகையவர்களெல்லாம் பிறகொரு கால் மனம் மாறி தங்கள் முப்பொருளையும் அன்னாருக்காக அர்ப்பணம் செய்த சம்பவங்கள் இஸ்லாத்தின் வரலாற்றிலே தனிச் சிறப்பு வாய்ந்தவையாக விளங்குகின்றன.

இவர்களெல்லாம் திடீரெனமனம் மாறி தங்கள் உள்ளங்களையும் உடல்களையும் அந்த மகானிடம் ஒப்படைத்து விடுவதற்கு அந்தமகா புருஷரிடம் காணப்பட்ட சக்திதா னென்னே! மனித சமுதாயத்தின வரலாற்றில் இவைபோன்ற சம்பவங்களைக் காண்பது அரிதேயன்றோ? அண்ணல் நபி ஸல் அவர்கள் மனிதவர்க்கத்திற்கு போதித்த போதனைகள் சாதித்த சாதனைகள் தமது வாழ்க்கையில் செய்து காட்டிய செயல்களையும் ஒவ்வொரு முஸ்லிமும் நன்குணர்ந்து அதன்படி நடக்க நாயன் நல்லருள் பாலிப்பானாகவும் ஆமீன்.

## நபிமணியின் நன்மொழிகள்

○ முஸ்லிம்கள் எல்லோரும் ஒருடல் போன்றவர்கள். ஒருவனுக்குத் தலையில் வலி என்றால் அவனது உடல் முழுவதுமே துன்புறுகிறது. அவனுடைய கண்ணில் வலி என்றால் உடல் முழுவதும் வலிக்கிறது.

○ ஆண்களும் பெண்களும் விபசாரம் செய்வதைப் போல இறைவனால் மிகவும் கண்டிக்கப்படுவது வேறு எதுவுமில்லை.

○ இறைவனுடன் வேறு எதையும் இணையாக்காதே.

○ இஸ்லாம் என்பது இறைவனுக்கு இணைவைக்காமல் தலைசும் தொழுவது ஐகாத்கொடுப்பதும்நோன்பு நோற்பதுமாகும்.


அனைவருக்கும் எமது மிலாத் வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாண மக்களை கவர்ந்த கண்ணாடி வியாபாரிகள்

ஜெஸிமா பிக்சர் பலேஸ்

222, 232 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 7127



**Abdulla & Co., Opticians Jaffna**

நீங்கள் நீண்டகாலம் எதிர்பார்த்த றட்ஜ் சைக்கிள்கள் புதிதாக இறக்குமதி செய்தவை-புத்தம் புதிய உருவில் உறுதியான உறுப்புகளுடன் வேறெந்த சைக்கிளிலும் பார்க்கப் பெறுமதியானதும் திருப்திதருவதுமான றட்ஜ் சைக்கிளை

இன்றே வாங்கிப் பாவியுங்கள

ஏஜண்ட

அப்துல்லா அன் கோ

உத்தரவாதமுள்ள கண்ணாடி விற்பனையாளர்கள்

127, கே. கே. எஸ். ரோட், போன்: 486


## திருக்குர் ஆன் பொன்மொழிகள்

○ மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து நிச்சயமாக ஒரு நல்லுபதேசம் வந்திருக்கிறது. உங்கள் இதயங்களிலுள்ள நோய்களுக்கு அது ஓர் அருமருந்தாகவும் விசுவாசங்கொண்டவர்களுக்கு நேர் வழிகாட்டியாகவும், நல்லருளாகவும் இருக்கிறது.

⁂ ⁂ ⁂

○ (நபியே!) நீர் கூறும் 'அல்லாஹ் ஒருவன் தான்; (அவன்) எவருடைய தேவையுமற்றவர். அவர் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை அவனுக்கு ஒப்பாகயாருமில்லை. (112: 1—4)

○ அண்டைவீட்டார் உறவினருக்கும், அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உங்களைச் சார்ந்த அண்டை வீட்டாருக்கும், உங்களைச் சாராத அண்டை வீட்டாருக்கும், உங்கள் கூட்டாளிகளுக்கும், வழிப்போக்கர், பிரயாணிகளுக்கும், அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள். எவன் கர்வங்கொண்டு, பெருமையாக நடக்கின்றானோ அவனை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (4: 36)

○ (நபியே) உம்மை உலகப் புக்களுக்கெல்லாம் ஓர் அருளாகவே யன்றி நாம் அனுப்பவில்லை; (21:107)

○ இன்னும் அல்லாஹ்வின் அனுமதியின் பேரில் (மக்களை) அவன்பால் அழைப்பவராகவும், ஒளிவிடும் விளக்காகவும் இருக்கின்றீர். (33:-45 46)


⁂ ⁂ ⁂

○ அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புவர்கள், பின்பற்றவேண்டிய அழகிய முன்மாதிரி நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடமே இருக்கிறது. (33: 21)

○ இன்றைய தினம்,உங்களுடைய மார்க்கத்தைப் பரிபூரணமாக்கிவைத்து,என்னுடைய இருளையும் உங்கள் மீது சிரப்பமாக்கிவைத்து, இந்த இஸ்லாம் மார்க்கத்தை உங்களுக்குப் (பொருத்தமானதாகத்) தெரிந்தெடுத்தேன். (5:3)

தொகுப்பு:

ஏ. எல். லாஹிர்.



முதன்முதலாக இப்ருஹீம் (நபி) அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பரிசுத்த ஆலயமாக விளங்கும் புனித மக்கமா நகரம்;

## நாயக வாக்கு

— நஜ்முன் —

தோற்றதை வேலும், தொகுத்துநீர் வைத்தபொருள் ஏற்றத்தை சேரும் இறைசோக்கான்-மாற்றம் இலாச் சிக்கையில்லை நோக்கும் தெரிந்துநீர் செய்யும் வினைப் பந்தமில்லை நோக்கும் பகுத்து.

○

அல்லும் பகலும் எவர்மீதும் அகத்தே பகைகொள்ளாதொழுகற் (கு)
ஒல்லும் வகையால் முயன்றிடுவாய்; ஒழுக்கம் நீதி என்னதுவாம்;
சொல்லும் என்றன் செயல் முறையைத் தொடர்ந்தோர் என்னை உவந்தவரால்

○

உங்கள் உடன் பிறந்தோரை யுமக்குக்கீழ் இருத்தியுளான் உடைபோல்; தன்கீழ்த்
தங்குவோர் தரற்கொருவன் தான் உண்ணும் உணவளிக்க! தானே பூணும்
சங்கையுடை அளிக்கும் கல்க! மிகப்பணியாயின் துன்புறுத்தல் தவிர்க்க! அன்றேல்
அங்கு இல தாங்கவொண்ணாப் பணியாயின் துணைபுரிக! அவனுக்கவரே.

○

திறவு கோல் உண்டெதற்கும்: சொர்க்கம் திறக்கும் உறவுகோள் ஏழையுடன்
பசிஆர் குடலுள்ள பீண்டி நிரப்பல் இசை ஆர் அறத்துள் இனிது.


அன்பர்கள் ஆதரவாளர்கள் அபிமானிகள் அனைவருக்கும்

எங்கள் உளங்கனிந்த

மிலாத் நல் வாழ்த்துக்கள்

ஏ.கே.எஸ். அன் சன்ஸ்

நகைமாளிகை

யாழ்ப்பாணம். தொலைபேசி: 519


## பிறந்ததின...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் மருதானை பள்ளிவாசல் மைதானத்தில் இன்று மாலை பிரமாண்டமான கூட்டமொன்று நடைபெறும்.

கொழும்பு துவமூசு சமிஷனின் வீட்டுத் திட்டத்தின் முஸ்லிம் சங்கம்; புனுமண்டல் வீதியிலுள்ள சாரண தலைமை அலுவலகத்தில் நபிநாயகம் அவர்களின் பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறது.

இதுதவிர மட்டக்களப்பு, திருக்கோணமலை, கண்டி, புத்தளம் ஆகிய பகுதிகளிலும்

## தேர்த்திருவிழா

கோண்டாவில், ஞாயிறு உடுவில் ஸ்ரீ சிவஞானவிநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும். பி. ப. 2 மணியளவில் சுவாமி ரதாரோகணத்திற்கு எழுந்தருளுவார். மறுநாள் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

இன்று விசேஷ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

'இவ்வுலகில் நீ ஒருவழிப்போக்கனைப் போல் இரு; உன்னை இறந்தவனாகஎண்ணிக்கொள்'

மணிவாக்கு

ஒவ்வொன்றையும் துலக்குவதற்கு ஒரு பொருள் உண்டு. உள்ளத்தைத் துலக்குவது இறைவனின் நினைவே.

—அண்ணல் நபி (ஸல்)

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி மீ 28 உ (12-7-65)

## நாசவேலைகள்

இப்போதுள்ள அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக வெளியில் மட்டுமன்றி, அரசாங்கக் காரியாலயங்களுக்குள்ளும் நாசவேலைகள் ரகசியமாக நடந்து வருவதாகச் செய்திகள் கிடைத்து வருகின்றன. நெருப்பில்லாமல் புகையாது. இவ்விஷயமாக அரசாங்கம் அதிக கவனத்துடன் இருந்து நாசவேலைக்காரர்கள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது. இது அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் நன்மைக்கும் அவசியமும் அவசரமுமாகும்.

உதாரணமாக மொழி இலாகாவில் நாசவேலைகள் நடப்பது கண்டுபிடிக்கப்பட்டு அங்குள்ள சில அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவாம். மொழி இலாகாவுக்கு யாரும் தமிழில் கடிதம் எழுதினால் அக்கடிதங்களைத் திருப்பி அனுப்புவதுடன், "சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் கடிதம் எழுதினால் தான் உமது கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்" என்று குறிப்பு எழுதி தமிழ்க் கடிதங்களைத் திருப்பி அனுப்புவதில் சில அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருந்ததாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும் கிளிநொச்சி எம். பி.க்கே இவ்வித கடிதமொன்று எழுதப்பட்டதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது. இதைப் பற்றி தமிழ் எம். பி.க்கள் விசேஷ கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க முற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ்ப்பகுதிகளிலுள்ளவர்களுக்கும், தமிழர்களுக்கும் பல காரியாலயங்களிலிருந்து சிங்களத்தில் கடிதங்களும் தந்திகளும் இப்போதும் அனுப்பி தமிழ்பேசும் மக்களுக்கு ஆத்திரமும் அவதியும் ஏற்படுத்தி வருவதைப்பற்றி சென்றவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். மொழி விஷயமாகத் தங்களுக்குச் செய்யப்பட்ட பெரிய அநீதி சீக்கிரம் திருத்தப்பட்டு தங்கள் நியாயமான குறைகள் நீங்குமென்று புதிய அரசாங்கம் வந்தபின் பொதுவாகத் தமிழர் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கையில், பழைய முறையிலேயே அவர்களுக்குப் புரியாத "சிங்களத்தில் மட்டும்" அரசாங்கக் கடிதங்களும் தந்திகளும் வருவது அவர்களுக்கு எவ்வளவு ஏமாற்றமும் எரிச்சலுமாக்குமென்பதை விளக்கத் தேவையில்லை.

புதிய அரசாங்கத்துக்கும் தமிழருக்குமிடையே நெருக்கடி ஏற்படுத்தி, தமிழரின் ஆதரவை அரசாங்கம் இழக்கும்படி செய்ய வேண்டுமென்பதே பல பொது இலாகாக்களிலுமுள்ள சில அதிகாரிகளின் நோக்கமென்றும் அதனால்தான் அரசாங்கத்தின் பெயரால் தமிழருக்கு ஆத்திரமூட்டும் காரியங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருவதாகவும் கருதப்படுகின்றது. இதில் உண்மை இருக்குமாயின் இதுபற்றி அரசாங்கம் மட்டுமன்றி தமிழ்ப் பிரதிநிதிகளும் தீவிர கண்காணிப்புச் செய்து, அவ்வித விஷமங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சென்ற சுமார் 9 வருட காலமாக அரசாங்கத்தில் தமிழருக்கு இடமில்லாமலிருந்தது. அப்போது பல வகுப்புவாதிகள் தமிழருக்கு மாறாகச் செய்த துவேஷ நடவடிக்கைகள் கொஞ்சமல்ல, காரியாலயங்களிலே தமிழ் அதிகாரிகளுக்கு கீழ்த்தர சிப்பந்திகளும் பல சிறுமைகளைச்செய்து வந்தது பகிரங்க ரகசியம். சென்ற அரசாங்கத்தில் இடதுசாரியினர் சேர்ந்ததும் சூழ்நிலையில் சற்றே மாறுதல் ஏற்பட்டதென்றாலும் விஷமங்கள் நின்றபாடில்லை; வகுப்புவாதத்தை நம்பி, அரசியல் ஆதிக்கம் வகிக்க விரும்பிய கயவர்களுக்கு புதிய அரசாங்கத்தில் தமிழரும் சேர்ந்து ஒத்துழைப்பது வேப்பங்காயாக இருப்பது இயற்கையே. இவ்வித நாசவேலைகளைச் செய்யும் விஷமிகளால் தேச ஒற்றுமையும் முன்னேற்றமும் தடைபடுமாதலால் இவர்களைக் கண்டுபிடித்து விஷமிகளை நீக்கும் முக்கியபணியில் அரசாங்கம் மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்கக் கடமைப்பட்டுள்ளன.

## மகளை உயிருடன் கொளுத்தினர்

லண்டன், ஜூலை 11

நெஞ்சில் துளியும் ஈவிரக்கமின்றி ஒரு தந்தை தன் புதல்வியைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொலை செய்தார். இச்சம்பவம் பிரிட்டனில் நடந்தது.

47 வயதான ஜேம்ஸ் ஹென்றி மிட்கேல் தனது புதல்வியை கதவுக்கு முன்னர் நிறுத்தி வைத்தாராம். அவளை இரும்புக் கம்பிகளைக்கொண்டு அடித்தார். அவள் மீது கத்திகளை வீசினர், மயக்கமடைந்து விழுந்த மகள் மீது பெட்ரோலை ஊற்றித் தீவைத்தார். இப்போது அவர்மீது வழக்கு நடக்கிறது.

எரிவாயு விளக்குத்திரியை சரியாகக் கொளுத்தவில்லை எனக் கூறி தமது 15 வயதுப் புதல்வனை மிட்கேல் அடித்தார் என்றும் புதல்வி மார்லேன் அப்பொழுது சகோதரனுக்குப் பரிந்து வரவே அவளை கதவுக்கு முன்பு நிறுத்தி வைத்துக் கத்திகளை வீசியதாயும் முடிக்குரியதரப்பில் கூறப்பட்டது.

கைத்தடி, இரும்புக் கம்பிகளைக் கொண்டு அவளைத் தாக்கியதால் மார்லேன் மயக்கமடைந்து விழுந்தார். பின்னர் மிட்கேல் அவர் மீது பெட்ரோலை ஊற்றி நெருப்பு வைத்தார் என்றும் கூறப்பட்டது.

## சமாதானக் கூட்டத்தில் சண்டை

ஹெல்சிங்கி, ஜூலை 11

ஹெல்சிங்கியில் நடைபெறும் உலக சமாதான மகாநாட்டில் சீனப்பிரதிநிதிகளும் ரஷ்யப் பிரதிநிதிகளும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பெரும்பான்மை நாடுகள் ரஷ்யாவுக்கு ஆதரவாக நின்றன.

# அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்

## இராணுவத்துக்கு ஜே. ஆர். அறிவுறுத்து

பம்பலப்பிட்டி, ஞாயிறு

"ஆட்சியிலுள்ள அரசாங்கத்திற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுக்காத இராணுவத்தினர் இறந்தவர்களாகவே கணிக்கப்படுவார்கள். இராணுவத்தினர் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும். மக்களினாலேயே தெரிவுசெய்யப்படும் எந்த அரசாங்கமும் இராணுவப்படையின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறவேண்டும்' இவ்வாறு ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தியத்தலாவாவில் ராணுவப்படை வீரர் சித்தியெய்தி வெளியேறுகின்ற வைபவமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிடுவதாவது:

"இராணுவப்படையின் நலன்களை தேசிய அரசாங்கம் சிறந்த முறையில் கவனிக்கும். ஜனநாயக அரசாங்கத்தின் பிரதான அம்சம் இராணுவப்படையினரே. எங்களுடைய இராணுவச்சேவை 1948-ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. எங்களுக்கு சுதந்திரம் கிடைத்தபின்னரே திரு. டி. எஸ். சேனநாயகா இவைகளை ஆரம்பித்துவைத்தார்.

எமது இராணுவத்தினரின் சேவையைப்பற்றி நாங்கள் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஜனநாயகமுறையினால் மக்கள் தெரிவுசெய்யும் ஓர் ஆட்சிக்கு நாங்கள் வழிவகுத்துள்ளோம்."

# "இடமாற்றத்தின் மூலம் வஞ்சம் தீர்த்து விட்டனர்"

## லங்கா ஜாதிக குரு சங்க கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'முதலாளித்துவ ஆட்சி இந்த நாட்டிலே வரக்கூடாது என்பதற்காகச் சென்ற பொதுத்தேர்தலில் முதலாளித்துவ சக்திகளை எதிர்த்தோம். தனிப்பட்ட ஒரு கட்சிக்காக நமது சங்கத்தைச்சேர்ந்த ஆசிரியர்கள் சென்ற பொதுத்தேர்தலின் போது ஈடுபடவில்லை. ஆனாலும் நமது சங்கத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் வஞ்சம் தீர்க்கும் நோக்கத்துடன் தற்காலிகமாகவே வேலைநீக்கம் செய்யப்பட்டும் இடமாற்றம் செய்யப்பட்டுமிருக்கிறார்கள். இதனை நாம எதிர்த்துப் போராடி வெற்றி காணவேண்டும்' என்று லங்கா ஜாதிக குரு சங்க உபதலைவர் திரு. தர்மபாலா லங்கா ஜாதிக குரு சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் திரு. வ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு.

காரியதரிசி திரு. க. ஜெனகா, தலைவர் திரு. வ. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர் திரு. முருகப்பா, உபகாரியதரிசி திரு. ஆறுமுகம், தனாதிகாரி திரு. சிவஞானசுந்தரம்.

பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மந்திரிக்கு வரவேற்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம் செய்யும் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வாவை வரவேற்று உபசரிப்பதற்கும் கிளிநொச்சித் தொகுதிக்கு வேண்டிய வசதிகளை எடுத்துரைப்பதற்கும் கிளிநொச்சியிலுள்ள பொது நிலையங்கள் ஒழுங்கு செய்து வருகின்றன.

கிளிநொச்சிக்குச் செய்ய வேண்டிய பொது ஆக்க வேலைகளைப் பற்றி ஆராய்வதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களையும் வேறு பிரதிநிதிகளையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்டதொரு கூட்டத்தை கிளிநொச்சியில் கூட்டுவிக்குமாறு காணி அமைச்சரைக் கிளிநொச்சி எம். பி. கேட்டுக்கொண்டார்; அமைச்சர் இத்தகைய சங்கத்தை கூட்டுமாறு நிரந்தரச் செயலாளரைக் கேட்டுள்ளார் என்று அறியப்படுகிறது.

## வேள்விப்பலி நிறுத்தப்பட்டது

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய் கல்லடிப் பிள்ளையார் கோவிலில் வருடாவருடம் நடைபெற்று வந்த ஆடு கோழி வேள்விப்பலி இப்பகுதி [illegible]ர்களின் முயற்சியால் நிறுத்தப்பட்டு இவ்வருடமுதல் திருவிழா நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளது. திருவிழாவும் ஆரம்பமாகி இப்பொழுது நடைபெற்று வருகிறது.

## விவசாயிகள் கழக வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரவழைக்கப் பட்ட உயர்சாதிக் காளைகளில் சிலவற்றை இங்கு அனுப்பி வைக்குமாறுகோரி சம்பந்தப் பட்ட விவசாயப்பகுதித்தலைவர்களுக்கும் ஊர்காவற்றுறை, உடுவில் எம். பி.க்களுக்கும் இணுவில் தேசிய விவசாயிகள் கழகப் பொதுச்செயலாளர் திரு. செ. இலகுநாதன் கழகத்தின் சார்பில் ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

இப்படியான உயர் சாதிக் காளைகளை இங்கு அனுப்புதல் மூலம் விவசாயிகள் அதிக நன்மையடைய முடியுமென்றும் அவர் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இளநீரிலிருந்து பீர்!

எர்ணாகுளம், ஜூலை 11

இளநீரிலிருந்து ஒரு வகை பீர், பழரசபானம் போன்றவற்றை தயாரிக்க முடியும் என்று பி. வி. தாமஸ் என்ற டாபியோகா நிபுணர் கூறினார்.

ரப்பர் பாலை உறையச் செய்யும் அமிலத்துக்குப் பதிலாக பயன்படுத்த இளநீரிலிருந்து ஒருவித அமிலமும் தயாரிக்க முடியும் என அவர் சொன்னார்.

24 புட்டி இளநீருடன் ஒரு கிலோ சர்க்கரையைக் கலந்து அதை 6 மாதகாலம் வைத்திருந்து அந்த அமிலத்தைத் தயாரிக்க முடியும். இதைக் குடிசைத் தொழிலாக உற்பத்தி செய்யலாம். ஏராளமான பேருக்கு வேலை கிடைக்கும் என்றார் அவர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

வில்லாளை மெல்லியலோர் பங்கன் தன்னை மெய்யரைப் பிணியாதார் வினைகள் தீர்க்க, இல்லாளைக் கீழ்வேளூராளும் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே.

— அப்பர் சுவாமிகள்

## ஐயாறன்

எழுதுவது

யாழ்ப்பாணத்தில் இப்போது காட்டப்படும் 'லவ-குச' படத்தை அவசியம் பார்க்க வேண்டுமென்று சில அன்பர்கள் தூண்டவே அதைப் பார்த்தேன். லவனும் குசனுமாக வரும் இருவரும் தங்கள் பேச்சாலும் நடிப்பாலும் எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்து, பன்முறையும் கரகோஷம் பெற்றனர். ராமனாக வரும் ராமராவ், இந்தப் பாகம் வகிப்பதற்காகவே பிறந்தவர்போல் தோன்றுகிறது. அவ்வளவு பொருத்தம். சீதையாகவரும் அஞ்சலிதேவியின் உணர்ச்சிமிக்க நடிப்பு கல் மனதையும் கரைத்து பன்முறையும் கண்ணீர் வடிக்கச் செய்கிறது.

சலவைத் தொழிலாளியாக எம். ஆர். ராதா சிறிதுநேரம் வருகிறார். அதற்குள்ளாகத் தமது இயற்கையான நடிப்பாலும் நகைச்சுவையாலும் அவரை மறக்கமுடியாதபடி செய்கிறார்.

குடும்பமனைத்தும் சென்று அவசியம் பார்க்கவேண்டிய மேலான கலைப்படமென்று சிபார்சு செய்கிறேன்.

ஃ ஃ ஃ

சீதை குற்றமற்றவளென்று தெரிந்தும், ராமன் அவரை நிறை கர்ப்பிணியாக இருக்கையில் காட்டுக்கு அனுப்பியது சரியா? நீதியா?

தனக்கு இவ்வளவு பெரிய கொடுமை செய்த ராமன்மீது சீதைக்கு எவ்வளவு பதிபக்தி! கணவன் சற்றே பலமாகத் தட்டிவிட்டானென்றும், அல்லது காரணமெதுவுமே காட்டாமலும் விவாகரத்துச் செய்யும் நவநாகரிக காலமிது! இக்காலத்தில் சீதையைப் போன்ற பண்பு சிலருக்கு விபரீதமாகத் தோன்றக்கூடும். ஆனால் அதுதானே இந்துப் பெண்களின் உயர் பண்புக்கும் பெருமைக்கும் அடையாளம்.

ஊர் அபவாதத்துக்கு அஞ்சிய "ராஜா ராமன்" தானும் சீதையுடன் வனவாசம்செய்து 'சீதா ராமனாக' வாழவும் ஆட்சிப் பொறுப்பை பரதனிடம் விட்டுவிடவும் தயாராக இருந்தான். ஆனால் பரதனும் மற்றவர்களும் ஒப்பவில்லை. மன்னனுக்குள்ள புனிதமான பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்ற, தன் உயிர்த்துணைவியையும் துறந்து, தன் வாழ்க்கையையும் தியாகம் செய்கிறார் ராஜா ராமன்.

ஆனால் வின்ஸர் கோமகனோ தன் காதலிக்காக, ராஜ்யத்தையே துறந்து சென்றுவிட்டார். இதில் எந்தத் தியாகம் பெரிது? எது சுயநலம்? எது பொதுநலம்? ருசியான கேள்விகள், உங்கள் கருத்தென்ன?

ஃ ஃ ஃ

காலையிலே நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு தரிசனத்துக்காகச் சென்றதாகவும் அப்போது கோவில் கம்பிக்கதவு பூட்டப்பட்டிருந்ததாயும் உடனே சென்று தரிசனம் செய்ய முடியவில்லை என்றும் நண்பர் ஏமாற்றத்துடன் கூறி, காலை வேளையிலே கோவிலை எக்காரணத்தை முன்னிட்டும் அடைத்துவிடக் கூடாதென்றும், முக்கியமான பெரிய கோயில்கள் தரிசனத்துக்கு அதிகாலையிலிருந்து உச்சிக்காலம்வரையும் அவசியம் திறந்திருக்க வேண்டுமென்றும் சொன்னார். இதைப்பற்றி கோவில் நிர்வாகிகள் ஆலோசனை செய்து, பக்தர்களின் வசதிக்கான முறையில் தக்க ஏற்பாடுகளைச் செய்வது நல்லதாகும்.

ஃ ஃ ஃ

நல்லானை நரைவிடையொன்றூர்தியானை நால்வேதத்தானகம் [illegible]ச் சொல்லானைச் சுடர்மூன்றுமானான் தன்னைத் தொண்டாகிப் பணிவார்கட்கினியான் தன்னை,

(4-ம் கலம் பார்க்க)

# "கல்வி நிலையில் யாழ்ப்பாணம் பின்தங்கிவிட்டது"

## அ. இ. த. ச. யாழ்ப்பாண கிளை கூட்டத்தில் கண்டனம்

யாழ்ப்பாணம், திங்கள்

"அரசாங்கம் பாடசாலைகளைச் சுவீகரிப்பதற்கு முன்னால் இலங்கை முழுவதிலும் யாழ்ப்பாணமே கல்வி நிலையில் உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்தது. ஆனால் 1960-ம் ஆண்டுக்குப் பின், அதாவது அரசாங்கம் பாடசாலைகளை கையேற்ற பின் யாழ்ப்பாணம் கல்வி நிலையில் பின் தங்கிய இடமாக இருந்து வருகிறது. இது அரசாங்கத்தின் தலையீட்டினால் ஏற்பட்டதென்றுதான் சொல்ல வேண்டும்" என்று வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 18-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலை மண்டபத்தில் திரு. இ. பொ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"1954 லிருந்து 1959 வரையுள்ள கல்வி நிர்வாக அறிக்கையின்படி பிரதி வருடமும் 400 மேற்பட்ட தமிழாசிரியர் கூடி வந்தனர். தற்பொழுதும் தென்னிலங்கையில் பல காலி இடங்களுண்டு. 80 : 12 : 8 என்ற விகிதத்தில் 10000 மாணவ ஆசிரியர் நியமிக்கவேண்டிய போது 1200 தமிழாசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் 175 எஸ். எஸ். சி. சித்தியடைந்தோரே நியமிக்கப்பட்டனர். வித்தியா பகுதியார் புள்ளி விபரங்கள் பெற்று தமிழ் மாணவர் சராசரிக்கு தமிழாசிரியர்களை அரசாங்கம் நியமிக்கவேண்டும்.

உலகின் பிரதான நாடுகளில் ஆசிரியர் இடமாற்றத்திற்குரியவர்களல்லர். மாணவர்களையும் பெற்றோரின் சூழ்நிலையையும் அறிந்த ஆசிரியர்களே மாணவர்களுக்குத் திறம்படக் கற்பிக்கமுடியும். முகாமையாளர் காலத்துப் பாடசாலைகளின் தேவைக்கேற்ற ஆசிரியர்களைத் தெரிவெடுத்தனர். பாடசாலைகளைச் சுவீகரித்ததிலிருந்தே ஆசிரியர் மாற்றத்திற்கு உள்ளாக்கப் படுவதனால் விசேடமாக யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருகிறது"

யாழ்ப்பாணத் தமிழாசிரியர் சங்கத்தலைவர் இ. பொ. குமாரசாமி தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

எமது ஆசிரியர் மத்தியில் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததிலிருந்து பல்வேறு பிரச்னைகள் தோன்றியுள்ளன. நாம் அனுபவித்து வந்த அரசியலிசம போன்ற பல விதசலுகைகளை இழந்தோம். நமக்குத் தற்காலிக நியமனங்களே இன்றுண்டு. அரசினர் ஆசிரியருக்குரிய லீவு, கடன் வசதி, பதவி உயர்வு என்பன அற்ற நிலையிலேயே இருந்துவருகிறோம்.

அரசாங்க உத்தியோகத்தர்களாக நாம் கணிக்கப்படாத நிலையிலும், அவர்களைப்போல மாற்றத்திற்குரியவர்களென எச்சரிக்கப் படுகிறோம். மேலும் வெளி மாகாணங்களில் தமிழ் மாணவர் படிக்க வசதிகள் மறுக்கப்படுகிறது. இவையெல்லாம் தமிழாசிரியர்களையும், தமிழ் மாணவர்களையும் பாதிக்கின்றன. தமிழ் மாணவர் படித்துப்பட்டம் பெற்றும் பட்டினிப்பட்டாளமாகக் குவிகின்றனர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

### ஆங்கிலத்தின் அவசியம்

முன்னர் நான் மந்திரிசபையில் அங்கம் வகித்த காலத்தில் சிங்களமொழியுடன் ஆங்கிலம் முக்கிய மொழியாக இருக்க வேண்டுமென்றும் தமிழ் மொழியுடன் ஆங்கிலம் முக்கிய மொழியாக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தேன். ஆனால் நான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத காலத்தில் மொழி வெறியைத் தூண்டி மக்களிடையே உணர்ச்சியைப் பரப்பும் நோக்கத்துடன் ஆங்கிலத்தின் அவசியத்தை தமிழ்பேசுமினத்தின் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு போனவர்கள் உணர்த்தாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் நான் ஒன்றை மட்டும் வற்புறுத்தி சொல்ல விரும்புகிறேன். தமிழ் பேசும் மக்களின் புகழ் உலகமெங்கும் முன்னர்போல் தெரியவேண்டுமானால், ஆங்கிலத்தைக் கைவிடாமல் தமிழ் மொழிக்குக் கொடுக்கக்கூடிய அந்தஸ்தைக் கொடுத்துப் பேணி வளர்க்க வேண்டும். தமிழ் பேசும் மக்கள் ஆங்கிலத்தை முற்றாகக் கைவிடுவார்களேயானால் இந்த நாட்டில் தமிழ் பேசும் இனம் என்ற ஒரு இனம் வாழ்ந்ததென்ற அடிச்சுவடு கூடத் தெரியாமல் மறைந்து போய்விடும். இதேபோன்று சிங்களம் பேசும் மக்களும் ஆங்கிலத்தைக் கைவிடுவார்களானால் முடிவு இதுவாகத்தானிருக்கும்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

ஆங்கில தமிழ் எஸ். எஸ். சி. தராதம் பெற்ற ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் ஒரே விதமாகவிருந்து 10 வருடச் சேவை நிறைவெய்திய பின் ஆ. த. பத்திரம் வழங்கப்பட்டு வித்தியாசமானசம்பளம் வழங்கப்படுவது அநீதியானது. சமசேவை செய்யும் இருசாரார்க்கும் ஒரேவித சம்பளம் கொடுக்கப்படவேண்டும்.

தோட்டப்பாடசாலைகளிலிருந்து ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு ஏனைய ஆசிரியர்களைப் போலப் பயிற்சிக்காலத்துக்கு சம்பளம் கொடுபடவேண்டும்.

பழைய புதிய நியமனம் என்ற பாகுபாடின்றி சகல ஆசிரியர்களுக்கும் ஒரேவிதமாக லீவு வழங்கப்படவேண்டுமெனவும், சைவர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணப் பகுதியில் சைவர்களுக்கென இருந்த திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மீண்டும் திறந்து ஆசிரிய பயிற்சியை அதிகரிக்குமாறு கல்வி மந்திரி அவர்களைக் கேட்டிருந்ததை ஞாபகப்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுப்பது.

புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர்: இ. பொ. குமாரசுவாமி; உபதலைவர்கள்; திருமதி பூ. பொன்னம்பலம், திரு. பா. செ. ஞானப்பிரகாசம்; திரு. த. இராசேந்திரம். காரியதரிசி: திரு. இ. செல்வராசா; உபகாரியதரிசி: திரு. சி. கார்த்திகேசு; தனாதிகாரி: திரு. இ. வேலாயுதர். 14 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## காஷ்மீர்

புதுடில்லி, ஜூலை 11

பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் உணவு பற்றாக்குறையை எதிர்த்து பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாயும் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 10 பேர் மாண்டதாயும் கூறப்படுகிறது. அரசாங்க உணவுச் சாலைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினராம்.

அதேசமயம் இந்தியப்பகுதி காஷ்மீரில் தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டம் செய்த 830 பேர் கைதுசெய்யப்பட்டதாக பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

## 'பக்தியின் மூலம் ஒற்றுமையடையலாம்'

யாழ்ப்பாணம், திங்கள்

"தனது சங்கீதத்தினாலும் அசைவுண்டாகிய சாந்தகுணத்தினாலும் இறைவனாகிய பரமசிவனை கணவனாகப்பெற்றாள் பார்வதி. இறைவன் திருமேனியில் அணிகலன்களாகப் போலிருக்கும் பாம்பு தனது தீயகுணத்தை பார்வதியின் சங்கீதத்தைக் கேட்பதனால் மறந்த நல்ல நிலையில் இருக்கின்றது. சங்கீதம் கேட்பதன் மூலமும் கற்பதின் மூலமும் நம் தெய்வபக்தியுள்ளவர்களாகலாம். பக்தியின் மூலம் ஒற்றுமை நல்வாழ்வு ஆகியன கிடைக்கும்" இவ்வாறு பளை முருகமூர்த்தி கோவில் வசந்தமண்டப முன்றலில் நடைபெற்ற ஷண்முகானந்த சபா தொடக்கவிழாவில் சரவணபவ அரங்கைத் திறந்து வைத்து ஆசியுரை வழங்கிய பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் கூறினார். விழாவிற்கு கே. பி. ஹரன் தலைமை வகித்தார்.

தலைமையுரையின்போது திரு ஹரன் பேசுகையில், கலைஞர்கள் மதிப்புக்குரியவர்கள் என்றும், மனிதனிடம் மனதை லயப்படுத்துவதற்குத்தான் இசை உண்டானது என்றும் பெண்கள் சங்கீதம்கேட்பதாலும் கற்பதாலும் அவர்கள் பிள்ளைகள் நல்லவர்களாக விளங்கமுடியும் என்றும் கூறினார்.

பிரம்மஸ்ரீ க. ஷண்முகரத்தின சர்மா தலைமையில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது புலவர் ம. பார்வதிநாத சிவம் வாழ்த்துரை வழங்கினார் திருமதி சத்தியபாமா ராஜலிங்கத்தின் பாட்டுக்கச்சேரியும் நடைபெற்றது.

## சலவைத்தொழிலாளர் பிரச்னைகள்

### அரசாங்க அதிபர் வாக்குறுதி

யாழ்ப்பாணம ஞாயிறு

சலவைத் தொழிலாளர்களின் பிரச்னைகளை ஆராயுமுகமாக யாழ் அரசாங்க அதிபர் சலவைத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டி சலவைத்தொழிலாளர்களின் பிரச்னைகளை ஆராய்ந்தார்.

சலவைத் தொழிலாளர்களது முக்கிய பிரச்னையாகிய தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களின் விலை ஏற்றத்தையும், பொருள்கள் தட்டுப்பாட்டையும் நீக்க நடவடிக்கைகள் எடுப்பதாகவும், தேவையான மூலப்பொருட்களை அவ்வவ் பகுதிச் சங்கக்கடைகள் மூலம் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் ஏற்றவசதிகளைச் செய்வதாகவும் அரசாங்க அதிபர் தூது கோஷ்டியிடம் வாக்குறுதி அளித்தார். மகாநாட்டில் தீவுப்பகுதி திருக்குறிப்புத் தொண்டர் சேவாசங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். தீவுப் பகுதித் தொழிலாளர்களது தண்ணீர்ப் பிரச்னையும் மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

## நந்தா

புதுடில்லி, ஜூலை 11

பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் இந்தியத் துருப்புக்கள் நவீன ஆயுதங்களுடன் பலப்படுத்தப்படுவார்கள் என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா கூறினார்.

(5-ம்கலை தொடர்ச்சி)

குதி திருப்பித்தரவேண்டும் என்று கோருகிறார்கள் நம்நாடு சுதந்திரமாகவும், ஸ்திரமான அரசியலமைப்பைக் கொண்டதாகவும் இருக்கவேண்டுமேயானால் வட்டமேசை மகாநாட்டை மனப்பூர்வமாக ஆதரியுங்கள் வட்டமேசை மகாநாடு வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கும் எனது கட்சிக்கும் உண்டு"

மற்றும் பலர் பேசினர்

## சர்வகட்சி மகாநாட்டின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலம் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

திரு பொன்னம்பலம் தொடர்ந்து கூறியதாவது:-

### அரசாங்கத்தை எதிர்ப்பேன்

கண்டியில் பேராதனை சர்வகலாசாலை இருக்கிறது. கொழும்பில் பௌத்த மதத்தவர்களுக்கு வித்தியோதய, வித்தியாலங்கார சர்வகலாசாலைகள் இருக்கின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலையில்லை. இதனால் தமிழ் மாணவர்கள் மிகவும் கஷ்டமுறுகிறார்கள் என்பதை நான் அறிவேன், அரசாங்கத்தை நான் கேட்பது என்னவென்றால் பௌத்த மதத்தினருக்குச் சர்வகலாசாலை இருப்பதுபோல் இந்துமக்களுக்கும் ஒரு சர்வகலாசாலையை யாழ்ப்பாணத்தில் நிறுவித்தரவேண்டும். எனது வேண்டுகோளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க மறுத்துமேயானால் நான் தேசிய அரசாங்கத்தைக் கட்டாயம் எதிர்ப்பேன்.

தேர்தல் நடந்து நூறு நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. தேர்தலுக்கு முன்பும் தேர்தல் முடிவு தெரிந்த அன்றும் நாம் ஒன்று சேருவோம்; தமிழினத்தின் இழந்த உரிமைகளை மீட்க ஒன்றுபட்டுப் போராடுவோம் என சமஷ்டிக் கட்சியினரைத் தாழ்மையாய்க் கேட்டிருந்தேன். அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். அப்படி ஒன்றுபடுவோமானால் எம்முடைய பின்னால் நீங்கள் வாருங்கள் என்று அவர்கள் தெரிவித்தார்கள், நான் அவர்களுக்குக் கூறுவது என்னவென்றால் தமிழினத்தின் நலனுக்கு நீங்கள் உழைக்கும் பொழுது நானும் எனது கட்சியும் ஆதரவு தருகிறோமா? இல்லையா? என்பதை அவதானியுங்கள்.

இன்றைய அரசாங்கம் 1956ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உத்தியோக மொழிச்சட்டத்தில் சில சலுகைகளைத் தமிழினத்திற்குக் கொடுக்க உடன்பட்டிருக்கிறதே தவிர பூரணமான சலுகைகளை அரசாங்கம் அளிக்கவில்லை. இதனால் சமஷ்டிக் கட்சியினருக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டது இடைக்கால ஒப்பந்தம் என்று கூறுவதை நான் விரும்பவில்லை. சமஷ்டிக் கட்சியினர் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட அலுவலகங்களில் தமிழ் நிர்வாகமொழியாக இருக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கிறார்கள் அப்படியானால் மற்றைய மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களது நிலையென்ன? நான் சமஷ்டிக்கட்சியை எம்முடன் ஒன்றுபடுங்கள் என்று கேட்பது இழந்த நமது உரிமைகளை ஒன்றுபட்ட சக்தியால் பெறுவதற்கே தவிர எனது கட்சியை வளர்க்கவல்ல.

1956-ம் ஆண்டு தனிச் சிங்களச்சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பொழுது அதை நான் எதிர்த்தேன், அதேபோல் இன்னும் எம் இனத்தைப் பாதிக்கக்கூடிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படுமேயானால் நானும் எனது கட்சியும் கட்டாயம் எதிர்த்தே தீருவோம், இன்றைய நமது நாட்டின் சூழ்நிலையில் வேலையில்லாத்திண்டாட்டம் உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது, இந்தச் சூழ்நிலையில் நாம் வேற்றுமை மனப்பான்மையுடன் நடந்துகொள்வது புத்திசாலித்தனமல்ல

வவனியாப் பிரதிநிதி திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

"படித்த மாணவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அதற்கு சமஷ்டிக் கட்சியினர் ஏதாவது பொருளாதாரத்தைப் பெருக்குவதற்குத் திட்டங்கள் தீட்டினார்களா? திரு ஜி. ஜி. பொன்னம்பலம் ஐ. நா. மகாசபைக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் செல்லவிருப்பதையிட்டு ஒவ்வொரு தமிழ்மகனும் பெருமைப்படவேண்டும். ஐ. நா. மகாசபையில் ஒலிக்கும் குரல் தமிழினத்தின் குரல் என்பதை நான் கூற விரும்புகின்றேன். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ள வழிவகுக்கும்படி அன்று நாம் நடந்த அரசாங்கங்களைக் கேட்டுவந்தோம். அதைத்தான் இன்று சமஷ்டிக் கட்சியினர் கோரிநிற்கிறார்கள்.

உடுப்பிட்டி எம். பீ. திரு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

"யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த இரு அமெரிக்க நிபுணர்கள் யாழ்ப்பாணம் சில வருடங்களின்பின் பாலைவனமாகமாறிவிடும் எனக் கூறினார்கள். அப்படி மாறிவருமேயானால் வடமாகாண மக்களின் கதியென்ன? இக்காரணத்திற்காகத்தான் அன்று திரு. குமாரசுவாமி மகாவலிகங்கையை யாழ்ப்பாணத்திற்குத் திருப்ப வேண்டும் என்று அரசாங்கத்துடன் வாதாடிவந்தார். அவரின் கூற்றை சமஷ்டிக் கட்சியினர் ஏளனம் செய்தனர். அதே தமிழரசுக் கட்சியினர் இன்று ஈ. பி. டி. சில்வாவை மகாவலி கங்கையை வடமாகாணத்திற

(4ம் கலம் பார்க்க)

## நாசவேலைகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### நாசவேலைகள்

அரசாங்க இலாகாக்களில் வேண்டுமென்று நெருக்கடிகளை ஏற்படுத்தி சமூகமான வேலைகளைத் தடைசெய்வது, ரகசியங்களைத் தடம்புரளச் செய்வது, நெருக்கடியான நேரங்களில் வேலைநிறுத்தங்களை ஆரம்பிப்பது அரசாங்கஉடைமைகளுக்கு சேதம் விளைவிப்பது போன்ற பலதரப்பட்ட நாசவேலைகளைச் செய்வதில் அரசாங்க விரோதிகள் சிலர் தீவிரமாக இருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது, இந்த நாசவேலைகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து அதுசம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிப்பதில் சி ஐ டி பகுதியினரும் பொலிஸாரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்

### ஜயவீரா விவகாரம்

அண்மையில் சி ஐ டி பகுதியினரின் திடீர்சோதனைக்குள்ளான திரு. ஸ்டான்லி ஜயவீரா விவகாரத் சம்பந்தமாகவும் நிரந்தரக் காரியதரிசி திரு சமரசிங்கா மந்திரிசபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவிருக்கின்றார் ராஜாங்க மந்திரி திரு ஜே ஆர் ஜயவர்த்தனா புதிய நடவடிக்கைகளை குறித்து மந்திரிசபையின் விசேட கூட்டத்தில் விளக்கவிருக்கிறார்

## புதியகல்வி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமே செய்துதர வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் நிதிநிலைமை மோசமாக இருக்கும் இவ்வேளையில் எல்லாத் தேவைகளையும் அரசாங்கம் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்க முடியாது.

பாடசாலை வளர்ச்சியில்பெற்றோர்கள் காட்டும் ஆர்வம்தான் கல்வித்தரம் உயர்வதற்குரிய அடிப்படை அம்சமாகும் கிராமங்களிலுள்ள பெற்றோர்கள் தம் ஊரிலுள்ள வித்தியாலயத்தின் மீது கொண்டுள்ள பேரபிமானத்தை ஏனைய கிராம மக்களும் பின்பற்ற வேண்டும்

வலி—வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை பேசியதாவது:-

சைவம் உயிராகவும் தமிழ் உடலாகவும் கொண்டு இவ்வித்தியாலயம் சேவைசெய்து வருவது பாராட்டுதற்குரியது. இத்தகைய வித்தியாலயங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்குமானால் நமது பண்பாடும் கலாச்சாரமும் சிறப்புபெற்று விளங்கும்.

திருமதி செல்வநாயகம் பரிசில்களை வழங்கினார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

# 'அந்நிய தளங்களற்ற நடுநிலைமை தென்வியட்னும்வேண்டும்'

## பிரிட்டிஷ் வெளிமந்திரி அறிக்கை: மகாநாடு கூட்டவற்புறுத்து

### 2 மிக் விமானங்களை அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தின

லண்டன், ஜூலை 11

வியட்னும் சம்பந்தமாக உடனடியாக மகாநாடு நடைபெறவேண்டும் என்றும், இந்த மகாநாட்டிற்கு முன்பு அல்லது பின்பு அங்கு சண்டைநிறுத்தம் ஏற்படவேண்டும் என்றும், வெளிநாட்டுத் தளங்களோ, துருப்புக்களோ இல்லாத நடுநிலைமை தென்வியட்னும் சிருஷ்டிக்கப்படவேண்டும் என்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் கூறியிருக்கிறார்.

வட வியட்னுமில், தென் வியட்னுமிலும் பெரும் எண்மை மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசாங்கங்கள் ஏற்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் வட்வியட்னும் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் 1954-ம் ஆண்டு ஜெனிவா ஒப்பந்தம் அமுல் நடத்தப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது.

காமன்வெல்த் சமாதானக் குழுவை அனுமதிக்க முடியாது என்றும், பிரிட்டிஷ் மந்திரி திரு. டேவிஸின் விஜயத்திற்கு, சமாதானக் குழுவுக்கும் சம்பந்தமில்லை என்றும் அந்த அறிக்கை மேலும் கூறியது.

**2 மிக் சுடப்பட்டன**

வட வியட்னுமில் ஹானோய்க்கு 85 மைல் தூரத்தில் அமெரிக்க விமானங்கள் 2 மிக் விமானங்களைச் சுட்டு வீழ்த்தின என்று அறிவிக்கப்படுகிறது. வட வியட்னும் மீது குண்டு வீசச் சென்ற அமெரிக்க விமானங்களை இத்தமிக் விமானங்கள் சுட்டதாயும், அமெரிக்க விமானங்கள் அவ்விரங்களால் அவைகளை அழித்ததாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று வியட்காங் இலக்குகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 கொரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் 20 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும், 23 தென் வியட்னுமியர் கொல்லப்பட்டனர் என்றும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க விமானங்கள் காட்டுமிராண்டித் தனமாக ஆஸ்பத்திரி மீது குண்டு வீசியதில் டாக்டர்கள், நோயாளிகள் உட்பட 40 பேர் கொல்லப்பட்டதாக வட வியட்னும் செய்திகள் கூறுகின்றன.

## ஆஸ்திரேலியர் சாதனை

லண்டன், ஜூலை 11

ஆஸ்திரேலிய ஓட்ட வீரர் கிளார்க் 3 மைல் தூரத்தை 12 நிமிஷம் 52.4 விநாடிகளில் கடந்து,-தனது முந்திய சாதனையை முறியடித்தார். அவரது முன்னைய நேரம் 13.04 நிமிஷங்கள்.

## விமானவிபத்து: சதி காரணம்

ஒட்டாவா, ஜூலை 11

சமீபத்தில் விபத்துக்குள்ளான கனேடிய விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததென்றும், விமானத்தின் வால் பாகத்திலுள்ள மூடும் அறையில் இது வைக்கப்பட்டு வெடித்ததென்றும் நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள்.

## இருவர் ராஜினமா

வாஷிங்டன், ஜூலை 11

அமெரிக்க விமானப் படை காரியதரிசியும், தகவல் இலாகா அதிபரும் ராஜினமா செய்திருப்பதாய் ஜனதிபதி ஜோன்சன் கூறினர்.

## பிரஸ்னேவ்

வெளின்கிராட், ஜூலை 11

உலக கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவ் கூறினர்.

## சர்தாரின் சாதனை இந்திய வரலாற்றின் மகத்தானநிகழ்ச்சி

### முன்ஷி பாராட்டு

ஹைதராபாத், ஜூலை 11

'இந்திய சரித்திரத்தில் மகத்தான நிகழ்ச்சி ஸர்தார் படேல் இந்தியாவை ஐக்கியப்படுத்தியதாகும். ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் அவர் இந்தியாவை நிர்மாணித்தார்' என்று ஸ்ரீ கே. எம். முன்ஷி கூறினார்.

நகரிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்கள் சார்பில் ஸ்ரீ முன்ஷிக்கும், ஸ்ரீமதி லீலாவதி முன்ஷிக்கும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிக்கப்பட்டன. ஸ்ரீ முன்ஷி பதிலளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் கலாசாரம், பழக்க வழக்கங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாமல், புதிய தலைமுறையினர் வளர்க்கப்படுகிறார்கள். நம்மை ஒன்றுபடுத்தி வைத்திருந்த சக்தி மறைந்து வருகிறது என்றும் ஸ்ரீ முன்ஷி கூறினார்.

எல்லா இந்திய மொழிகளுக்கும் மூல மொழியான சமஸ்கிருதம், அலட்சியம் செய்யப்படுவதையும் அவர் கண்டித்தார். சமஸ்கிருதத்தையும் மதத்தையும் கல்வியிலிருந்து அடியோடு அகற்றிவிட விரும்புவதாகத் தோன்றுகிறது என்று அவர் கூறினார்.

குடும்பக் கட்டுப்பாடுபற்றி அவர் பிரஸ்தாபித்து, குடும்பக் கட்டுப்பாட்டை தாம் பூரணமாக ஆதரிப்பதாகவும், ஆனால் கட்டாய கர்ப்பச்சிதைவு ரொம்ப கொடூரமானது என்றும் கூறினார்.

## கர்னல்பொமிதியன் பிரதம மந்திரியும், பாதுகாப்பு மந்திரியும்

### புதிய அல்ஜீரிய மந்திரிசபை

அல்ஜீயர்ஸ், ஜூலை 11

அல்ஜீரியாவில் கர்னல் பொமிதியன் தலைமையிலான புதிய மந்திரி சபை அறிவிக்கப்பட்டிருக்கிறது. கர்னல் பொமிதியன் பிரதம மந்திரி பதவியுடன், பாதுகாப்பு மந்திரி பதவியையும் வகிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி பென்பெல்லாவின் மந்திரிசபையிலிருந்த 7 மந்திரிகள் பொமிதியன் மந்திரி சபையிலும் இடம் பெற்றிருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் ஒருவரும், பென்பெல்லாவினால் சிறை வைக்கப்பட்டிருந்தவருமான திரு. பிடாட் புதிய மந்திரிசபையில் ராஜாங்க மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கர்னல் பொமிதியன் பிரதமரானதும் நிகழ்த்திய முதலாவது சொற்பொழிவில் அல்ஜீரியா எந்த வல்லரசுக் கோஷ்டியிலும் சேராது என்றும், அரபுநாடுகளுடன் அதுஉறவை வளர்த்துக் கொள்ளுமென்றும் கூறினர்.

அரபு நாடுகளுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொள்வது அல்ஜீரியாவின் கொள்கையென அரபுத் தலைவர்களுக்கு கர்னல் பொமிதியன் செய்திகளை அனுப்பியிருக்கிறார்.

பொமிதியன் மந்திரி சபையில் 21 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள், புதிய மந்திரி சபையை புரட்சிசபை அங்கீகரித்திருக்கிறது.

பொமிதியன் அரசாங்கம் உண்மையில் ஒரு ராணுவ அரசாங்கமே என இந்திய பிரஸ்டிரஸ்ட் கூறுகிறது. 6 பிராந்திய ராணுவத் தளபதிகளும், மற்றும் பல ராணுவ அதிகாரிகளும் மந்திரி சபையில் இருப்பதாக அது மேலும் கூறுகிறது.

## "நல்லமனதுள்ள பெரிய உருவம் சீனு"

— பூட்டோ

கெய்ரோ, ஜூலை 11

"கம்யூனிஸ்ட் சீன தென் கிழக்கு ஆசியாவை விழுங்கத் தயாராகிக் கொண்டிருக்கும் அசுரன் அல்ல" என்று பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சர் மந்திரிஸ்ரீ பூட்டோ ஒரு கெய்ரோ பத்திரிகை நிருபருக்களித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

நல்ல மனதுள்ள ஒரு பெரிய உருவம் என்று ஸ்ரீ பூட்டோ சீனுவை வருணிக்கிறார்.

சீனு ஒரு அசுரனைப் போல் தோற்றமளிக்கும்படி செய்துவிட்டார்கள்.

ஏனெனில் உலகத்தின்மற்ற பாகங்களுடன் அதற்குத் தொடர்பில்லாமல் செய்துவிட்டார்கள்.

ஆனால் உண்மையிலேயே பிரிட்டன்தான் அசுரனாக இருந்தது. என்று ஸ்ரீ பூட்டோ சொன்னார்.

இந்திய-பாகிஸ்தான் உறவுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் "இரு நாடுகளுக்குமிடையே கருத்தொற்றுமை ஏற்படும் காலம் வரும்" எனறர்.

வியட்னும்- எந்த யுத்தமுமே காலவரையின்றி நீடிக்க முடியாது.

மலேசியா- மலேசியாவுடன் சமூக உறவுகள் கொண்டிருக்கவே பாகிஸ்தான் விரும்புகிறது. ஆயினும் நாங்கள் இந்தோனேஷியாவைக் கண்டிக்க விரும்பவில்லை.

## இந்தியா, பாகிஸ்தானில் பெரும் வெள்ளப்பெருக்கு

### லட்சக்கணக்கானேர் அவதி

புதுடில்லி ஜூலை 11

அஸ்ஸாமில் பிரமபுத்ரா நதியும், இதர கிளை நதிகளும் வெள்ளப் பெருக்கெடுத்ததால் 45 கிராமங்கள் நீரில் மூழ்கிவிட்டன, 2 சடலங்கள் மீட்கப் பட்டன. பெருந்தொகையான மக்கள் பத்திரமான பிரதேசங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டனர். தேஜ்பூருக்கருகில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நாசமாகிவிட்டன. அரசாங்கம் பல நிவாரண வேலைகளை மேற் கொண்டிருக்கிறது.

பீஹாரில் பல நதிகள் பெருக்கெடுத்திருப்பதால் 200 கிராமங்கள் நீரில் மூழ்கி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

1 1/2 லட்சம் மக்கள் வீடிழந்தனர்.

சிட்டகாங்கில் 4,28,000 பேர் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டிருக்கிறர்கள். அங்கு 13 நதிகளில் வெள்ளம் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பகுதிகளும் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டிருக்கிறது.

## ஆபாசப்பிரசாரம் தடுக்கப்படவேண்டும்

புதுடில்லி, ஜூலை 11

ஆபாச இலக்கியங்களையும், படங்களையும் சினிமா விளம்பரங்களையும் தடைசெய்ய வேண்டும் என அகில பாரத மாதர்மகாநாட்டின் நிர்வாகக் கமிட்டி கேட்டிருக்கிறது.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் தலை ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள சில்லறை வியாபாரிகளிடமிருக்கும் [illegible]

மொத்த விற்பனவு உரிமையாளர்:

யாழ்ப்பாணம்: எஸ். சுப்பிரமணியம் அன் கோ.
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கரவெட்டி: நடன முருகன் மருந்துச்சாலை,
நெல்லியடி, கரவெட்டி.



டப்ளியூ. கே. ஜினதாஸ
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோடு,
கொழும்பு-11.

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

### கட்டிட வேலை

கண்டாவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு பண்டகசாலையை கண்டாவளையில் கட்டிக் கொடுக்கக்கூடியவர்களிடம் அதற்குரிய கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. பொறுப்பேற்றவுடன் வேலைகளை ஆரம்பித்துக் காலதாமதமின்றிக் கட்டிடத்தைப் பூர்த்தியாக்கவேண்டும். விபரங்களைச் சங்க மனேச்சரிடம் கண்டாவளையில் பெறலாம். அல்லது காரியதரிசியிடம் பெறலாம். காரியதரிசியை வேலை நேரங்களில் காங்கேசன்துறை வீதி, 216-ம் இலக்கத்திலுள்ள சீ. வி. பாட் கடையில் சந்திக்கலாம். கேள்விப்பத்திரங்கள் காரியதரிசிக்கு மேலே குறிப்பிட்ட விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரில் 24-7-65 பகல் 12 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும். 459

## கூட்டுறவு தின உப விழா

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவு சமாஜத்தினரால், கூட்டுறவு தின உபவிழா மாதகல் சென் தோமஸ் ஆங்கில பாடசாலைமண்டபத்தில் நடாத்தப்பட்டது. விழவுக்கு சமாஜத்தின் தலைவர் சீ. யேமஸ் தலைமை வகித்தார். மாதகல் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினரால் "வாழத்தெரிந்தவன்" என்னும் நாடகமும், பண்டத்தரிப்பு பலநோக்கு சங்கத்தினரால் "புதுவாழ்வு" என்னும் நாடகமும் நடித்துக் காண்பிக்கப்படும்.

கூட்டுறவு பாடசாலையில்

# தமிழ் மாணவர்கள் மீது பாரபட்சமா?

கோண்டாவில், ஞாயிறு

பொல்சொல்லையிலுள்ள கூட்டுறவும் பாடசாலையில் தமிழ்மொழிமூலம் கற்கும் மாணவர்களுக்கு, நான்கு பாடங்களை ஆங்கிலமூலம் கற்பிக்கத் தொடங்கியுள்ளனர்.

சிங்கள மாணவர்கள் சிங்களத்தில் கற்பிக்க அரசாங்கம் வசதியளித்திருக்கும் பொழுது தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மூலம் கற்பிக்காது ஆங்கில மூலம் கற்பிக்க முடிவு செய்திருப்பது அவர்களுக்கு புதியதொரு பிரச்னையைத் தோற்றுவித்துள்ளது.

இதுசம்பந்தமாக கூட்டுறவு பாடசாலையைச் சேர்ந்த 24 மாணவர்கள் கையொப்பமிட்டு ஒரு மகஜரை கிளிநொச்சி எம். பிக்கு அனுப்பிவைத்துள்ளனர். கிளிநொச்சி எம் பி. இது குறித்து வர்த்தக அமைச்சின் காரியதரிசியுடன் பேச்சுக்கள் நடத்தியதாகவும் அவர் அக்குறையை நீக்குவதற்கு முயற்சிஎடுப்பதாகக் கூறியதாகவும் நம்பப்படுகிறது.

## 'மைரன்' பயிற்சி பெற்றவர்களுக்கு கார்ப்பரேஷனில் நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத் திட்டத்தின் கீழ் ஜப்பானிய உதவியின் கீழ் நீர்கொழும்பு மீன் பிடி பயிற்சி நிலையத்தில் "மைரன்" இயந்திர பொறியியல் பயிற்சி பெற்றவர்களுக்கு மீன் பிடிக் கார்ப்பரேஷனில் நிரந்தர வேலை வழங்கப்படவிருக்கிறது. கைத்தொழில், மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனாவின் உத்தரவின் பேரிலேயே இவர்களுக்கு இப்பதவிகள் கிடைக்கவிருக்கின்றன.

நீர்கொழும்பு மீன் பிடிப் பயிற்சி நிலையத்தில் ஜப்பானிய நிபுணர்களிடம் மைரன் இயந்திர பொறியியலில் ஒருவருட பயிற்சி பெற்ற இவர்கள் கடந்த சில மாதங்களாக மீன்பிடி இலாகாவின் தலைமைக் காரியாலயத்தில் நாட்சம்பள வேலை பார்த்து வந்தார்கள்.

இவர்களுக்கு நிரந்தரமாக வேலை வழங்கவேண்டுமென்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் இச்சங்கத்தினர் சென்ற மாதம் கைத்தொழில் மந்திரியை பேட்டி கண்டதன் விளைவாக மீன்பிடி கார்ப்பரேஷனில் நிரந்தர வேலைவழங்க நடவடிக்கை எடுக்குமாறு மீன்பிடி கார்ப்பரேஷன் தலைவருக்கு மந்திரி குணவர்த்தனா உத்தரவிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து அவர்கள் விரைவில் மீன்பிடி கார்ப்பரேஷனில் நியமனம் பெறவிருக்கிறார்கள்.

என் ஆர் விக்கிரமசிங்க, என். தர்மநடராஜா, ஜ எஸ் தோமஸ், எஸ் வி புவனராஜசிங்கம், ஆர். ஜே தம்பையா ஏ. ரகுநாதன், எஸ். இளையதம்பி, ஏ. செல்வராஜா ஆகியோர் விரைவில் மீன்பிடி கார்ப்பரேஷனில் நியமனம் பெறவிருப்பவர்களாகும்.

## குடிதண்ணீர் கஷ்டம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்கள் நல்ல தண்ணீர் எடுப்பதற்காக மிகவும் கஷ்டப் படுகின்றார்கள். நூற்றுக்கு எண்பது வீதமான கிணறுகள் உப்பு நீரையும் ஏனையவற்றில் கலங்கல் நீரையும் உடையனவாக உள்ளன. சுழிபுரம் பறுளை முருகமூர்த்தி கோவிலுக்குமுன் றலில் உள்ள, வயல் ஒன்றில் உள்ள கிணற்றில் நல்ல தண்ணீர் எடுப்பதற்காக வரும் மக்கள் தொகை தினமும் ஐந்நூறுக்கு அதிகரிக்கிறது எனலாம். தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள கமக்காரர்கள் தமது தோட்டத்துக்கு வேண்டிய நீரை கிணற்றிலிருந்து எடுக்க முடியாமல் ஒருநாளைக்கு மூன்றுமுறை நீர் பாய்ச்ச வேண்டிய கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

## தற்கொலை: மனைவி பிரிவு காரணம்

சுழிபுரம், ஞாயிறு

மாதகலைச் சேர்ந்த ஐயன் வேலுப்பிள்ளை என்பவர் மனைவியின் பிரிவால் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். சி. நடராசா மரணவிசாரணை நடத்தினார்.

காலம்சென்ற வேலுப்பிள்ளையின் தாயார் சாட்சியமளிக்கையில், தனது மகனின் மனைவி கடந்த ஒரு மாதத்துக்கு முன்பாக இறந்துவிட்டதாகவும் அதற்குப் பின்னர் இவர் கவலையுடன் இருந்ததாகவும் கூறினார். ச. சுப்பிரமணியம் சாட்சியமளித்த பின்னர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்ததாக தீர்ப்பளிக்கப்பட்டது.

## மருந்தகம்

துணுக்காய், ஞாயிறு

துணுக்காய் பகுதி மக்களின் விருப்பமான மத்திய மருந்தகத்தை இம்மாதம் 18-ந் திகதி திறந்து வைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெற்று வருகிறது. இதற்கான ஒழுங்குகளை வைத்திய சேவைக் கண்காணிப்பாளர் திரு இராஜரத்தினம் கவனித்து வருகிறார். மத்திய மருந்தகத்தை கிளிநொச்சி எம் பி. திரு கா.பொ. இரத்தினம் திறந்துவைப்பார்.





உண்மையான லாகரின் சுவை எப்படியிருக்கவேண்டுமோ அப்படியான சுவையுடையது "திரீ கொயின்ஸ்"......

உலகத்திலேயே சிறந்த மோலற் — ஹொப்ஸ் ஆகியவையும், இலங்கையின் மிகச் சுத்தமான தண்ணீரும் கொண்டு, வடிதொழிலின் உயர்ந்த தரக்கட்டுக்கமைய முறைப்படி வடிக்கப்பட்டு, பக்குவப்பண்ணப்படுகிறது திரீ கொயின்ஸ்.

குளிர்ந்த திரீ கொயின்ஸ் லாகரைப் பரிமாறி உங்களையும் உங்கள் விருந்தினரையும் கௌரவியுங்கள். அது அதிசயிக்கத்தக்க திருப்தி தருவதைக் காணபீர்கள்

மெக்கலம் புறூவெறிஸ் (சிலோன்) லிமிடெட்

விநியோகஸ்தர்கள்:— ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிடெட். கொழும்பு 3


# வரி விளம்பரம்

### நன்றி அறிவித்தல்

எமது அருமைத் தந்தையாரான பிரபல வர்த்தகர் திரு சி. முருகேசு (7-ம் ஒழுங்கை வீதி, மாவிட்டபுரம்) அவர்களின் மரணச்சடங்கில் பங்கில் கலந்து கொண்டும், தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்த உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மு இராசரத்தினம்; மு. இராமசாமி, மு. [illegible], திருமதி இரத்தினபூபதி [illegible] தையா, திருமதி சிவகாமசுந்தரி கனகசபை. 638

### கல்வி

அரிச்சுவடி தொடக்கம் பட்டப்படிப்பு வரை போதனை வகுப்புகள் ஆரம்ப தேதி 14-7-65, ஈாஷனல் வித்தியாலயம், நம்பைக்குளம், வவுனியா. 682

ஜி. சி. ஈ. உயர்தர நிலையில் சித்தியடைந்து சர்வகலாசாலையில் இடம்பெறும் மாணவர்களுக்காக ஜி. ஏ கியூ வகுப்புகள் தற்போழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தாமதிக்காமல் உடன்சேருங்கள். பி. ஏ வகுப்புகள் சில நாட்களுக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன யுனிட்டெட் இன்ஸ்ரிருயூற், கொக்குவில் ... வெட்டி / 107, வருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 606

இந்த மாதத்தில் ஜி. சி. ஈ (சாதாரணம்) வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும். யுனிட்டெட் இன்ஸ்ரிருயூற், கொக்குவில், ... வெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 601

G A Q E. வகுப்புகள் 17-7-65-ல் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும். சேர விரும்புவோர் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், சி. எஸ். இராஜரத்தினம், காரியதரிசி U S T T (NR) சேமமடங்கற்றார் கல்லூரி, புத்தூர். 683

### விற்பனைக்கு

புதிய மொடல் 4 வாச்சி சிங்கர் மெஷின் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: எஸ், நடராசா C/o என் அரியரத்தினம், மட்டுவில் தெற்கு. 680

### தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு உற்சாகமான பெண் காஷியர் தேவை மாதச் சம்பளத்தை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்:- விளம்பர இல. 627, ஈழநாடு கே. கா. யாழ்ப்பாணம். 627

### WANTED

Mechanics for Bulldozers, loaders and Tractors required for work in Colombo. Long eperience with big Companies essential Cash security of Rs 500/- required Apply C/o Jafferjee Brothers 150 St Joseph's Street, Grandpass 634

Tractor Drivers required for agricultural tractors for transporting earth in Colombo for work on a contract basis Applicants should be licensed to drive lorries and land vehieles and should be in a position to give a cash security of Rs 350 - Apply C/o Jafferjee Brothers 150 St Joshph s Street, Grandpass 636

Bulldozer Drivers required for tronsporting earth in Colombo for work on a Contract basis Applicants should be licensed to drive lorries and land vehicles and should be in a position to give a cash security of Rs 500/- Apply C/o Jafferjee Brothers 150 St Joseph's Street, Grandpass 635

## இரட்டிப்பு விலை

சுழிபுரம், ஞாயிறு

கசாப்பு கடைக்காரர்களால் கால்நடைகளின் அதிகவிலைக்கு வாங்கப்படுவதால், பால் மாடு பால் ஆடு இப்பகுதியில் இரட்டிப்பு விலைக்கு கூட வாங்க முடியாமல் இருக்கின்றது. கால்நடைகள் உணவுகள் பெற்றுக் கொள்ள முடியாமலும் அதவும் இரட்டிப்பான விலை கொடுத்து கால்நடைகள் வாங்கவேண்டி இருப்பதாலும் பல கால்நடைபட்டி வைத்திருந்தோர் தமது தொழிலை விட்டுவிட்டனர். ஒவ்வொர்கிழமையும் வேள்விகள் நடைபெறுவதாலும் பல கடாக்கள் வெட்டப்படுகின்றன, நல்ல பால் பெற்றுக் கொள்ள முடியாமலும், மக்கள் அவதிப்படுகின்றனர்.

அனைவருக்கும் எமது மீலாத் வாழ்த்துக்கள்!





"ராதா" மின்சார மருந்து

தலையிடி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், மூக்கடைப்பு, வலிப்பு, நோவு, உளைவு, வீக்கம், நரம்புச் சுளுக்கு, கைகால் முடக்கு, வாதம், பக்கவாதம், மொளிவாதம், மாறாத இரணம் வெட்டுக்காயம், நரம்புச் சிலந்தி, பிளவை, புரையோடும் ஆறாத புண்கள், காதுவலி, காதில் சீழ் வடிதல், பீநிசம், பல்வலி, அரணை, வீக்கம், தேள் விஷம், நாய் கடி இவை வெளிப்பூச்சினாலும், வாந்திபேதி, அஜீரண பேதி, உஷ்ணபேதி, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாய்வு, மாரடைப்பு முதலிய அநேக ரோகங்கள் உள்ளுக்குப் பாவிப்பதாலும் சில நிமிஷங்களில் நீங்கிவிடும்.

தயாரிப்பாளர்கள் ராதா புரொடக்ஸ்

விநியோகஸ்தர்கள்:— போன்: 541

எஸ். சுப்பிரமணியம் அன் கோ

53, கே.கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு.

புட்டி ஒன்றின் விலை ரூபா 1-50

வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு.

## சேவை நலன் பாராட்டு

நல்லூர், திங்கள்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் 17 ஆண்டுகள் அதிபராகக் கடமையாற்றிய திரு எஸ் குமாரசாமி கடந்த வாரம் அதிபர் சேவையிலிருந்து இளைப்பாறினர். திரு குமாரசாமியின் சேவைநலனைப் பாராட்டும் வகையில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஊர்ப்பொது மக்கள பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

**S. R. S.**

**ஜவுளி மாளிகையில்**

எமது

சொந்த கைத்தறிகளில்

தயார் செய்யப்பட்ட

கைத்தறி சேலைகளும்

லங்கா சேலைகளும்

மலிவான

விலைகளில் பெறலாம்

எஸ். ஆர். செல்லத்துரை

216, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 296.

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**

Edgar Wallace's
Thriller

**THE MYSTERIOUS MILLIONAIRES**

## பாடசாலை பஸ்சேவை அதிகரிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக பஸ்சேவை நடாத்தும்படி இலங்கை போக்குவரத்துசபை தலைவருக்கு தேசிய சேவை மந்திரி திரு வி. ஏ. சுகததாச தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி பொன்னம்பலம் இவ்விஷயம்பற்றி தேசியசேவை மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தை தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

கோப்பாய் கிறிஸ்தவகல்லூரிக்கும், "யங்மென் கில்ட்"டுக்கும் இடையே யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோட்டியில் கிறிஸ்தவகல்லூரி 26—24 புள்ளிகளால் வெற்றி யீட்டியது. போட்டி முடிவடையும்வரை மிகவும் விறுவிறுப்பாயிருந்தது. இடைவேளையில் வை எம் ஐ 16—12 புள்ளி பெற்றிருந்தது. இடைவேளைக்கு பிறகு கோப்பாய் கல்லூரி மிகவும் திறமையாக விளையாடி இரண்டு புள்ளிகளால் வெற்றி யீட்டியுள்ளார்கள். மத்தியஸ்தர்கள் எம். பத்மநாதன், ஏ பாலசிங்கம்.

மற்றுமோர் போட்டி சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ் மத்தியகல்லூரிக்கும் இடையே சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென்ஜோன்ஸ் வெற்றி யீட்டியது. ஸ்கோர் 35—16.

## விருந்தினர் விருந்தாகினர்

சைகோன், ஜூலை 11

கடந்த புதன் கிழமை விருந்துக்கு வந்திருந்த மூன்றுபேரை புலி ஒன்று சாப்பிட்ட சம்பவமொன்று அறிவிக்கப்பட்டது. இறந்துபோன ஒரு உறவினரின் ஞாபகார்த்தத்தைக் கொண்டாடுமுகமாக நடைபெற்ற ஒரு விருந்தில் 20 விருந்தாளிகள் மேசையைச் சுற்றியிருந்தனர். சாப்பிட ஆரம்பிக்கும்போது புலி ஒன்று காட்டிலிருந்து பாய்ந்து வந்து மூவரை அடித்துத் தின்றுவிட்டது. பின் 7 விருந்தினர்களைக் காயப்படுத்திவிட்டுக் காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டது.

## இராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். டபிள்யூ. டி ஜே அபயவிக்கிரம டி பி பி பொன்னுன்டோ, ஜே ஏ கருணாரத்ன ஆகிய பத்துப் பேர்களும், அவர்களது மேலதிகாரியான லான்ஸ் காப்பரல் விக்கிரமாராச்சியை அவர் கடமையாற்றிக்கொண்டிருக்கும் போது தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் பாரிஸ்டர் எம் சிவானந்தன், புறக்டர் எஸ் பி மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். கப்டன் பெரேரா, எதிரிகளின் வழக்கறிஞருக்கு உதவியாக நியமிக்கப்பட்டிருந்தார்

காப்பரல் விக்கிரமாராச்சி சாட்சியமளித்தபோது கூறியதாவது:

சம்பவம் நடந்ததினம் இரவு 11 மணிக்கு சட்டவிரோதக் குடியேற்றக்காரர் வருகையை தடுக்கும்படி செண்டாவது லெப்டினண்ட் சில்வாவின் உத்தரவுடன் இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர். தலைமன்னார் துறைமுகத்திலிருந்து பேசாலைவரை கடற்கரையோரமாக, 10 நிமிடத்திற்கு இரண்டுபேர் வீதமாக கடமையாற்ற இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர். நான் எல்லோரையும் அனுப்பிவிட்டு கடைசியாக உதயரத்ன பண்டாவுடன் கடற்கரையோரமாக சென்றுகொண்டிருந்தேன். 4 மைல் சென்றதும் கடற்கரையில் ஒரு கூட்டத்தை கண்டேன் அக்கூட்டத்திற்கருகே சென்றபோது அவர்கள் மண்ணை அள்ளி வீசியதுடன் ரைபிளாலும், கொட்டனாலும் கைகளாலும் எதிரிகள் தாக்கினார்கள்

எதிரிகள் சார்பில் ஆஜரான பாரிஸ்டர் எம் சிவானந்தன் சுமார் ஆறுமணித்தியாலங்கள் சாட்சியைதொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார். இதைத் தொடர்ந்து மூன்று எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர் எச் டபிள்யூ டி ஜெ அபயவிக்கிரம, டி பி பி பொன்னுன்டோ, ஜே ஏ கருணாரத்ன ஆகிய மூவருமே விடுதலைசெய்யப்பட்ட எதிரிகளாவர்.

விசாரணை தொடர்ந்துநடைபெற்றபோது, உதயரத்ன பண்டா சாட்சியமளித்தபோது விக்கிரமாராச்சியுடன் தான் சென்றதாகவும் கூறினர்.

உதயசேன சாட்சியமளித்தபோது தானும் அந்தக் கூட்டத்தில் ஒருவராக நின்றதாக கூறினர்.

சார்ஜன் சொய்மன் சாட்சியமளித்தபோது சம்பவம் நடந்த தினம் இரவும், இருபதுபேரளவில் கடற்கரையில் ரோந்து சுற்ற அனுப்பியதாகவும் சிலர் கையில் துப்பாக்கிகொண்டு சென்றதாகவும் கூறினர்,

இரண்டாவது லெப்டினண்ட் சில்வா சாட்சியமளித்தபோது கூறியதாவது:- ரோந்து சுற்றுவதற்கு நானும் சென்றேன். ரோந்துசுற்ற நான்தான் அதிகாரம்கொடுத்தேன்; காலை மூன்று மணிக்கு நான் கடற்கரையில் இருந்துகொண்டிருக்கும்போது, விக்கிரமாராச்சி சிலருடன்வந்து நடந்தவற்றைக் கூறினர், அவரது காதுகளிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருப்பதையும், மற்றக் காயங்களையும் பார்த்தேன். அதன்பின் தலைமன்னார் முகாமிற்கு கூட்டிச்சென்று விக்கிரமாராச்சியை தலைமன்னார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன்.

மேல்விசாரணை இம்மாதம் 28-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பொருளாதார சமூக முன்னேற்ற சபை காங்கிரஸ் நிறுவியது

யாழ்ப்பாணம், திங்கள்

பொருளாதார சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடும் வகையில் அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொருளாதார சமூக முன்னேற்றசபை ஒன்றினை நிறுவியுள்ளது. இச்சபையில் உடுப்பிட்டி எம். பி திரு எம். சிவசிதம்பரம், திருவாளர்கள் என். சிவனேசன், எஸ். ஸ்ரீபாஸ்கரன், ரி. பரமானந்தராஜா, ஆ தனபாலசிங்கம் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகசபைக் கூட்டம் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் இம்மாதம் 16-ம் திகதி காலை பலாலி விமான நிலையம் வந்திறங்கும் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி பி. டி சில்வாவையும் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலத்தையும் வரவேற்பதெனவும், இம்மாதம் 24-ம் திகதி உத்தியோகபூர்வமாக விஜயஞ்செய்யும் கல்வி மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லையை வரவேற்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது

இக் கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

"கூட்டுஸ்தாபனங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

பட்டதாரிகளாக உள்ள மாணவஆசிரியர்களுக்கு பட்டதாரிகள் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

அடுத்தமாதம் 7-ம் திகதி நாகவில் பொதுச்சபைக் கூட்டத்தை நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது

## சீஸன் டிக்கட் வழங்குக மந்திரிக்குக் கோரிக்கை

காங்கேசன்துறை, திங்கள்

காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலைத் தொழிலாளருக்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் சீஸன் டிக்கட்டுகளை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தேசிய சேவைகள் அமைச்சர் திரு வி வி சுகதாசவிடம் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியின் காங்கேசன்துறைக்கிளை கோரியுள்ளது

வாலிப முன்னணி தேசிய சேவைகள் அமைச்சருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

1950-ம் ஆண்டு சிமிந்தித் தொழிற்சாலை இயங்கத் தொடங்கிய காலம்- முதலாக பஸ் கம்பனிகள் கைத்தொழில் அமைச்சராக இருந்த திரு ஜி ஜி. பொன்னம்பலம் தின் கோரிக்கைக்கு இணங்கி சிமிந்தித் தொழிற்சாலை ஊழியருக்கு சீசன் டிக்கட் வழங்கி வந்தது பஸ்சேவை தேசிய மயமாக்கப்பட்டபின் இந்த முறை நிறுத்தப்பட்டு வட்டது. ஆனல் புகையிரத பிரயாணத்திற்கான சீசன் டிக்கட்டுக்கள் தொடர்ந்து வழங்கப்பட்டுவருகின்றன எனவே இ போ ச வும் சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு சீஸன் டிக்கட்டுகள் வழங்க உடன் நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறேம்,

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

விளையாட்டுக்களில் வெற்றி தோல்வி முக்கியமல்ல. அவற்றில் கலந்துகொள்வதுதான் முக்கியம். பிற்கால வாழ்க்கைக்கு விளையாட்டுப்போட்டி மிகவும் உதவுகிறது. சாதி, சமய பாகுபாடற்ற சூழ்நிலையை விளையாட்டு மைதானம் உருவாக்குகிறது இத்தகைய போட்டிகளுக்குப் பெற்றோர் நிறைந்த ஆதரவளிக்கவேண்டும். பிள்ளைகள் முன்னேற்றவேண்டும்". இவ்வாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு எட். எம் அப்துல்காதர் கொண்டமாவடி ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தினரின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் கூறினர்.

விநோத உடைப்போட்டியில் சண்டல் விற்பனையாளராக வந்த ரி. ஜெயரத்தினராசா முதலிடத்தையும் பிச்சைக்கார வேடமணிந்த என் ஞானச்சந்திரன் இரண்டாமிடத்தையும் பெற்றனர். கிரீஸ் கம்பம் ஏறுவதில் உடுப்பிட்டியைச் சோந்த பி தங்கவேலாயுதம் வெற்றியீட்டினர்.

சங்கீதக்கதிரை: செல்வி கமலாதேவி செல்வநாயகம், செல்வி ராதாரமணி குமாரசாமி, செல்வி சொரூபராணி குமாரசாமி.

இல்ல அலங்கரிப்பு: சிவப்பு இல்லம், பச்சை இல்லம்.

இல்லங்களின் புள்ளி விபரம்: சிவப்பு 251, பச்சை 171.

இவ்வருட சம்பியன்களாக செல்வன்கள பி யோகநாதன், பி யோகச்சந்திரன், பி பாலச்சந்திரன், ஆர் ஞானபண்டிதன், ரி கதிர்காமநாதன் ஆகியோரும், செல்விகள எஸ். திருச்செல்வம், எஸ் யோகராணி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஆலய வருடாந்த பூசை

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி தட்டங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருட பூசை கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சுமார் 8000 மக்களுக்கு அன்னதானம்வழங்கப்பட்டது. பகல் விசேஷ பூசையும் இரவு விசேஷ தீபாராதனையும் நடைபெற்றன.

### டெஸ்ட் கிரிக்கெட்

## இங்கிலாந்து— நியூஸிலந்து

லீட்ஸ், ஜூலை 11

லீட்ஸில் இங்கிலாந்துக்கும் நியூஸிலந்துக்குமிடையே நடைபெறுவரும் இறுதி கிரிக்கெட் டெஸ்டில் நியூஸிலந்து நேற்று 3 வது இன்னிங்ஸைத் தொடர்ந்து விளையாடியது. முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 4 விக்கெட் நஷ்டத்திற்கு 546 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது. நியூஸிலந்து முதல் இன்னிங்ஸில் 193 ரன்கள் எடுத்தது.

## இன்று

"ஜலஜா" கன்னிப்பெண் நூல்வெளியீட்டுவிழா மாலை வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் மேலைவீதியிலுள்ள முது தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அரங்கில் திரு. வி. எஸ். விசுவலிங்கம் தலைமையில் நடைபெறும். இவ்விழாவை முதலியார் செ. சின்னத்தம்பி ஆரம்பித்துவைப்பார்.

* * *

இலங்கை அமெரிக்கசங்க நிதிக்காக இன்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் ராஜநகைச்சுவை நாடகமன்றத்தினரின் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' என்ற நாடகமும் நடைபெறவிருக்கிறது.

**மகத்தான 3வது வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | மொடேர்ன் (பதுளை)

விஜயா (மட்டக்களப்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி, ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா, மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா மற்றும் பலர் நடித்த




**லவகுசா**

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றும் புகழ்பூத்த இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—

படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!

இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.